சபாபதி

முதற்பாகம்

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ.பி.எல்.

அவர்களால் இயற்றப்பட்டது

இவர் எழுதிய மற்ற நூல்கள்

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள். நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, உத்தம பத்தினி, அமலாதித்யன், கள்வர்தலைவன், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்ரார்ஜுனா, கொடையாளி கர்ணன். சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து. மாளவிகாக்னிமித்ரம். விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். நாடக மேடை நினைவுகள்—ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன். இரண்டு நண்பர்கள். சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரச குமாரன். சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியார், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள் குறமகள். நல்லதங்காள், சிறுகதைகள் நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆல்தானபுரம் நாடகச் சபை, சங்கிதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீந்தார், சிவாலயங்கள், இந்தியாவிலும் அப்பாலும் — ஐந்து பாகங்கள், சிவாலய சிற்பங்கள், சதி சக்தி, மனை ஆட்சி, இந்தியனும் ஹிட்லரும், தீபாவளி வரிசை, காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயம், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்கள், சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள், இல்லறமும் துறவறமும்.

நான்காம் பதிப்பு

கிடைக்குமிடம் :

P. சம்பந்த முதலியார் B.A., B.L., இல்லம்

13 [redacted]. ஆச்சாரியப்பன் தெரு, சென்னை-1.

காபி ரைட்]

1956

விலை ரூபா [redacted]

2.50

என் தந்தை—தாயார்

ப. விஜயரங்க முதலியார்
ப. மாணிக்கவேலு அம்மாள்

ஞாபகார்த்தமாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது

முகவுரை

இது சபாபதி நாடகவரிசையில் முதல் பாகம். இந்த வரிசையில் இன்னும் ஏழு பாகங்கள் அச்சிட்டிருக்கிறேன், ஒவ்வொன்றும் பிரத்யேகமாய் நடிக்கப்படலாம்.

இந்த நாடகத்தையாவது நான் வெளியிட்ட மற்ற நாடகங்கள் எதையாவது நடிப்பதென்றால் எனக்குச் சேரவேண்டிய ராயல்டி கட்டணத்தைச் செலுத்திய பிறகே நடிக்கவேண்டும்; நான் ஒருவருக்கும் இலவசமாக நடிக்க உத்திரவு கொடுப்பதில்லை. மேற்சொன்னபடி எனக்கு ராயல்டி கொடாமலும் என் உத்திரவு இல்லாமலும் என் நாடகம் எதையாவது யாராவது நடித்தால் தற்கால காபிரைட் சட்டப்பிரகாரம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்படிக்கு,
ப. சம்பந்தம்.

நாடக பாத்திரங்கள்

மாணிக்க முதலியார்	...	சபாபதி முதலியார் தகப்பன்
சபாபதி முதலியார்	...	மாணிக்க முதலியார் பிள்ளை
குப்புசாமி முதலியார்	....	சபாபதி முதலியார் மாமனார்
கிருஷ்ணசாமி	...	சபாபதி முதலியார் மைத்துனன்
முருகேசம் குமரகுரு நரசிம்மாச்சாரி	....	சபாபதி முதலியாரின் சிநேகிதர்
சுந்தரமூர்த்திப் பிள்ளை	...	ஓர் பெரிய மனுஷ்யன்
சபாபதி	...	சபாபதிமுதலியாரின் வேலையாள்
சின்னசாமி முதலியார்	...	தமிழ் வாத்தியார்
நாகேஸ்வர ஐயர் கோபிநாத் ராவ் கோவிந்தப் பிள்ளை	...	பாடகர்கள்
திரிபுரம்மாள்	....	சபாபதி முதலியார் தாயார்
தெய்வயானை அம்மாள்	...	சபாபதி முதலியாரின் மாமியார்

சிநேகிதர்கள், பிராமணன் முதலியவர்.

கதை நிகழ் இடம் :—சென்னை, திருவல்லிக்கேணி.

குறிப்பு :— எனது நாடகங்களில் வரும் பெயர்களெல்லாம் புனைப் பெயர்களேயொழிய ஒருவரை குறிப்பனவல்ல.

சபாபதி

(முதல் பாகம்)

முதல் அங்கம்

முதல் காட்சி

இடம்:—சென்னை திருவல்லிக்கேணியில் மாணிக்க முதலியார் வீட்டில் ஓர் அறை.

சபாபதி முதலியார் வருகிறார்

ச.மு. பைஜோவ்! (by Jove) நாலேகால் மணியாயிபோச்சி, இன்னம் ஓர்த்தரும் வரலே. இந்த இண்டியன்சு (Indians) களுக்கு பங்க்சுயாலிடி (punctuality) இண்ரதே தெரியரதில்லெ; யூரோபியன்ஸா (Europeans) யிருந்தா, நாலரை மணியிண்ணு, நாலு மணிக்கெல்லாம் சரியா வந்தூடமாட்டாங்களா! — யாரடா அங்கே? சபாபதி!

சபாபதி மெல்ல வந்து கதவின் ஓரம் நிற்கிறான்.

சபாபதி!—அடே! என்னடா இது? நான் உன்னெ கூப்பிடறேன், இங்கே நின்னுகினு, பேசாதிருக்கிறயே!

ச. இல்லேப்பா — நீ வந்து — உன்னெ கூப்பிட்டெ — இண்ணு நெனச்சிக்கினே அப்பா!

ச.மு. வாட் நான்சென்ஸ்! (what nonsense) நான் என்னமாடா என்னெ கூப்டுகுவேன்?

ச. நீ—உன்னயே கூப்பிடமாட்டே—அல்லா? ஆமாம்பா, தப்புதான்.

ச.மு. இங்கே வாடா இப்படி—நம்ப ரெண்டு பேருக்கும் ஓரே பேரா இருக்கிறத்துலெ, பெரிய ந்யூசென்சா (nuisance) இருக்குது; உம்பேரெ நீ மாத்திகோ.

ச. அதென்னமாப்பா முடியும்? எம்பேரெ நானே மாத்திக்க முடியுமா ?

ச.மு. ஏண்டா முடியாது ?

ச. நானே என்னமாப்பா மாத்திகிறது ?

ச.மு. ஏன் வேறே பேர் வைச்சிக்கோ.

ச. ஓ! அப்படி சொல்ரையோ—ஆறு—அதுக்கு ரொம்ப செலவு புடிக்குமே அப்பா.

ச.மு. அதுக் கென்னுத்துக்குடா செலவு ?

ச. எனக்கு பேர் வைச்சப்போ, எங்க பந்துகோலுங்களுக் கல்லாம் எவ்வளவு சாப்பாடு கீப்பாடெல்லாம் போட் டாங்களாமே. அந்தமாதிரி செய்யத் தேவலையா ?

ச.மு. அதுக்கு எவ்வளவு புடிக்கும் ?

ச. ஒரு அஞ்சி ரூபாயாவது புடிக்காதா ?

ச.மு. அம்மாவெ கேட்டு அஞ்சி ரூபா வாங்கிதர்ரேன் — பேரெ மாத்திக சீக்கிரம்.

ச. அப்படியே ஆவுட்டும் அப்பா,

ச.மு. ஊம்— என்னுண்ணு பேரே மாத்திக்கரே ?

ச. ஊம்—நானு—ஊம்—ரத்தினசபாபதி இண்ணு பேரு வைச்சிக்கிறேம்பா.

ச.மு. வாட் நான்சென்ஸ்! (what nonsense) சபாபதியே ஒதவாது இண்ணு, ரத்தின சபாபதி என்னுடா அது! அதெல்லாம் ஒதாவது. வேறே என்னமாறு பேர் வைச்சிகணும்.

ச. அப்படியே ஆவட்டும்பா.

ச.மு. சரிதான், நீ போயி தெருவண்டெ பாரு, என் சினேகித ருங்க யாராறலும் வர்ராங்களா இண்ணு. [போகிருன்]

ச. இதோ வர்ராரப்பா ஒருத்தரு.

முருகேசம் வருகிருன்.

மு. குட் ஈவ்னிங், பிரதர். (good evening brother)

ச.மு. குட் ஈவினிங், வாங்க வாங்க !—என்ன பிரதர், இவ் வளவு லேட்டா (late) வந்தைங்களே ? நான் நாலு மணிக்கெல்லாம் வரச்சொல்லலே ?

மு. [கடியார சங்கிலியை இழுத்து, கடியாரத்தைப் பார்ப்பதுபோல் பார்த்து] ஓ அஞ்சி நிமிஷம் லேட்டா போச்சி!

ச.மு. அஞ்சி நிமிஷமா? இரவது நிமிஷமாச்சி—உங்க கடியாரம் ஸ்லோவா (slow) போராப்போலே யிருக்குது—காட்டுங்க பார்க்கலாம்.

[முருகேசத்தின் கடியார சங்கிலியை இழுக்க, சாவிகொத்து மாத்திரம் வெளிப்படுகிறது.]

என்ன பிரதர்! கெடியாரம் எங்கே?

மு. கெடியாரம்....ரிபேருக்கு (repair) கொடுத்திருக்கிறேன்.

ச.மு. கொஞ்ச நாழிக்கி முன்னெ—என்னமோ மணி பாத்து சொன்னீங்களே. என்னமா சொன்னீங்க?

மு. சும்மா, ஒரு கெஸ் (guess) பண்ணேன்.

ச.மு. சாவிகொத்தெ பாத்து!

குமரகுரு வருகிறான்.

கு. எக்ஸ்கியூஸ் மி (excuse me) பிரதர்—நான் வர்ரத்துக்கு கொஞ்சம் நேரமாச்சி—நேத்து நீங்க கொட்டெ பாக்கு கேட்டைங்களே, அத்தெ நல்லதா பொறுக்கி வாங்கியாரத்துக்கு கொஞ்சம் நேரமாச்சி.

ச.மு. வேணும் பிரதர், நீங்களே வைச்சிகிங்க, வீட்லெ நேத்து சாயங்காலம் பஸ்டுகிளாஸ் (first class) கொட்டெ பாக்கு வாங்கி யிருக்கிறாங்க—கொஞ்சம் கொண்டுவரச் சொல்ரேன் பாருங்க—அடே சபாபதி!

[சபாபதி மறுபடி வருகிறான்.]

அம்மா கிட்டேபோயி, நேத்து சாயந்திரம் வாங்கனுங்களே, அந்த கொட்டெ பாக்குலே கொஞ்சம் வாங்கினு வா—சீக்கிரம். [சபாபதி போகிறான்.]

கு. என்ன பிரதர் நேத்து மத்யானம் என்னமா யிருந்துது?

ச.மு. காபி (coffee) எல்லாம் நண்ணாயிருந்துது, அந்த உப்பு மாவுலே தான் கொஞ்சம் உப்பு அதிகமா போட்டுட்டான்.

கு. அதெல்லா பிரதர். அரித்மெடிக் (arithmetic) பேபரெ பத்தி கேட்டேன்.

ச.மு. அதுவா? க்வைட் ஈசி (quite easy), ஒன்பது சம்ஸ் கரெக்ட் (sums correct)

கு. எட்டு சம்ஸ்தானே கொடுத்திருந்துது?

ச.மு. ஓ!—அது சொல்ரைங்களோ — அதுலே — ஒரு சம் முக்கு ரெண்டு ஆன்சர் (answer) வந்துது பாருங்கோ, அத்தெ சேர்த்து ஒன்பது கணக்கு பண்ணிவுட்டேன்.

சபாபதி பாக்கைக் கொண்டு வருகிறான்.]

ச. இந்தாப்பா.

ச-மு. ஏண்டா! டர்டி பெக்கர்! (dirty beggar) கையிலேயா எடுத்துவர்ரது? உன் டர்டி ஹான்ட்ஸ்லே (dirty hands) கொண்டுவரக்கூடாது இண்ணு எத்தினிதரம் சொல்ரது?

ச. நீ சொல்லவே இல்லையப்பா.

ச-மு. எல்லாம் சொல்லியிருக்கிறேன், இனிமேலே என்னை கொண்டாரச் சொன்னாலும், ஒரு தட்டுலே வைச்சி கொண்டு வரணும்.

ச. சரிதாம்பா.

ச-மு. பிரதர்ஸ், இந்த பாக்கெ கொஞ்சம் டிரை (try) பண்ணி பாருங்க,

மு. பஸ்டுகிளாஸ்!

கு. நன்னா இருக்குது பிரதர்.

ச-மு. ஏன் ருக்மாங்கதம் இன்னம் வல்லே? எப்பவும் இப்படித்தாம் பிரதர் அவன். எந்நேரமும் புஸ்தகம் தான், ஹி ஹார்ட்லி ஒர்க்ஸ் (he hardly works) பிரதர்—கொஞ்சம்கூட எக்சர்சைஸ் (exercise) எடுத்துகிறது இல்லெ—நாம்ப போயி டெனிஸ் (tennis) பிகின் (begin) பண்ணுவோம். அவன் வரட்டும் அப்புறம்—அடே சபாபதி' என் டெனிஸ் ஷூஸ் (shoes) கொண்டுவா சீக்கிரம்— [சபாபதி போகிறான்] பிரதர் முருகேசம், உங்கள் பாட் (bat) கொண்டு வந்திருக்கைங்களா?

மு. இதோ கொண்டு வந்திருக்கிறேன் பிரதர்.

ச.மு. ஏது பிரதர், நியூ (new) வா யிருக்குது? என்ன பிரதர், றிஸ்டு பாண்டெ (wrist band) பீச்ச கையிலெ கட்ரைங் களே? நீங்க என்ன லெப் ஹாண்டிலெயா (left hand) ஆட்ரைங்க?

மு. இல்லே பிரதர், (brother)—சோத்து கையிலே தான் ஆட்ரேன்—ஆனாலும் டுவிஸ்டு (twist) பண்ணும் போது இந்த கையிலெ சுளுக்கிகிது, அதுக்காக—

சபாபதி ஒரு வெள்ளித் தட்டில் பந்தாடுகிற ஜோட்டை வைத்துக் கொண்டு வருகிறான்.

ச.மு. வாட் நான்சென்ஸ்! (what nonsense) என்னடா இது? ஜோட்டே தட்டுலே வைச்சி கொண்டார்ரையே!

ச. நீதானே அப்பா சொன்னே, எத்தெ கொண்டாரச் சொன்னாலும் ஒரு தட்டுலே வைச்சி கொண்டாரச் சொல்லி.

ச.மு. ஸ்டுபிட் கூஸ்! (stupid goose!) இதுகூடவாடா தெரி யாது? எதுவானு திண்ரவஸ்து கொண்டாரச் சொன்னு தட்டுலே வைச்சி கொண்டாரணு மின்னு, ஜோட்டே கூடவா, தட்டுலே வைச்சி கொண்டாரச் சொன்னேன்?

ச. எனக்கென்னமாப்பா தெரியும், நீ சொல்லிக் கொடுத்தா அல்லவோ தெரியுமப்பா.

ச.மு. இதுகூடவா சொல்லிக்கொடுக்கணும்? இனிமேலே ஜோட்டெ தட்டுலே வைக்காதே, போ.

ச. இனிமேலே ஜோட்டே தட்டுலே வைக்கலேப்பா— போரேம்பா — என்னமோ இங்கிலீஷ்லெ சொன் னேயே—டுபிட் கூஸ் இண்ணு—அதுக்கு அர்த்தம் என் னப்பா!

ச.மு. ஸ்டுபிட் கூஸ் (stupid goose) இண்ணு ரொம்ப கெட் டிக்காரன் இண்ணு அர்த்தம், போ. [சபாபதி போகிறான்.] என்ன போங்க பிரதர், இவனெ கட்டிகினு அழுரது பெரிய ந்யூசென்ஸா (nuisance) யிருக்குது. அண்ணு கிட்ட சொல்லி இவனெ டிஸ்மிஸ் (dismiss) பண்ணி

விடலாம் இன்னு பாத்தா, எனக்கு மனசு வரல்லெ சின்னபோது மொதல் என்னோடே வளர்ந்து வந்திருக்கிறன்,—ஸ்டுபிட் (srupid) டா யிருந்தாலும், க்வைட் ஆனஸ்டு சாப் (quite honest chap)—வாங்க பிரதர்ஸ், போகலாம்—ரொம்ப நாழியாயி போச்சி!—

[வெளியே பார்த்து]

அடடடே! என்ன தூர்ராப்போலெ யிருக்குது! மழெ வந்துட்டுது பிரதர்—இண்ணைக்கு டெனிஸ் (tennis) முடியாது—சி!

கு. ஆமாம் பிரதர்—வெரி ஹெவி ரெயின் (very heavy rain), ஆடமுடியாது இனிமேலெ.

ச.மு. அப்போ, வேறே என்ன செய்யலாம்? கார்ட்ஸ் (cards) ஆடலாமா?

மு. ஆமாம் பிரதர்.

ச.மு. அடே சபாபதி!

சபாபதி வருகிறன்.

கார்ட்ஸ் கொண்டா சீக்கிரம். [சபாபதி போகிறன்.] நம்ப மூணுபேர்தா இருக்கிறோமே—முன்னூத்திநாலு —ஸ்டுபிட் கேம் (stupid game) தான் ஆடமுடியும்.

சபாபதி ஒரு போஸ்டு கார்டு (port card) எடுத்துக்கொண்டு வருகிறன்.

ச. இந்தாப்பா.

ச.மு. என்னடா இது? இத்தெ கொண்டாந்தையே?

ச. கார்டு கொண்டுவரச் சொன்னையே அப்பா.

ச.மு. சத் கழுதை! கார்டு பாக் (cark pack) கார்டு பாக் தெரியாதா?

ச. அதுவா?—இதோ கொண்டாரேம்பா. [போகிறன்.]

ச.மு. இவனெ கட்டிகினு அழரது பெரிய கஷ்டமா போச்சி எது சொன்னலும் தப்பா செய்யரான்!

சபாபதி ஒரு கார்பெட் பாக் (carpet bag) எடுத்துக்கொண்டு வருகிறன்.

ச. இதோ அப்பா!

ச.மு. வாட் இடியட்! (what idiot) என்னடா இத்தெ கொண்டாந்தையே!

ச. கார்பெட்பாக் கொண்டாரச் சொன்னையே அப்பா.

ச-மு. ஏண்டா? நான் கார்பெட் பாக் இண்ணு சொன்னேனு?

ச. நீ சும்மா கோவிச்சிக்காதெ அப்பா,—இந்த இங்கிலீஷ் பாஷெ எனக்கு நண்ணு அர்த்தமாவலெ — தமுழுலே சொல்லப்பா.

ச.மு. கார்டு பாக்குக்கு தமிழ் என்னு பிரதர் ?

ச. என்னுப்பா, அது தெரியாதா ஒனக்கு ? என்ன முட்டாளா இருக்கிறேப்பா!

ச-மு. அடே ஸ்டுபிட் கூஸ்! பேசாதிரு.

மு. காயிதக்கட்டு இண்ணு சொல்லுங்க பிரதர்.

ச. ஆ ! அவருக்கு தெரியும்பா, அவர் கெட்டிக்காரப்பா ! டுபிட் கூஸ்! அவரு!

ச—மு. என்னுடா அவரை திட்ரையெ? கழுதை !

ச. நான் எங்கேப்பா திட்டினேன் ? கெட்டிக்காரருண்ணல்லவோ சொன்னேன்! டுபிட்கூஸ் இண்ணு, ரொம்ப கெட்டிக்காரன் இண்ணு நீதானே அப்பா சொன்னே.

ச—மு. மூடு வாயெ ! தடிக்கழுதை ! இன்னொருதரம் பேசனு உன்னெ டிஸ்மிஸ் (dismiss) பண்ணி உடுவேன் — நயினு கிட்ட சொல்லி.

ச. இல்லெப்பா இல்லெப்பா!—நீ கோவிச்சிக்காதேப்பா.

ச-மு. ஆனு — வாயெ மூடிகினு போயி — காயிதக்கட்டு — கொண்டா சிக்கிரம்.

ச. உம் பேசக் கூடாதல்லவா ? [போகிருன்]

ச-மு. பெரிய இடியட்டா (idiot) இருக்கிருன். இவனெ பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கி அனுப்பிச் சூடலாமிண்ணு, நானு மாத்திரம் ஒண்டியா என்னமாப்பா போறது, நீயும் கூடவாப்பா இண்ரா! இவனெ என்னு செய்யரது?

சபாபதி பெரிய காகிதக்கட்டு ஒன்றைக் கொண்டு வருகிருன்.

ச.மு. பாத்தைங்களா பிரதர் ; சொன்னத்துக்குச் சரியா செய்யரான்! ஏண்டா, இத்தெ வைச்சிகினு என்ன மாடா ஆடரது ?

ச. பேசலாமா அப்பா ?

ச-மு. பேசு.

ச. நீ இஸ்பெட் காயிதம் தானே கேட்டே ? அப்பவே நெனேச்சேம்பா, ஆனாலும் நீ பேசக்கூடாது இன்னேயே இன்னு இத்தெ கொண்டாந்தேம்பா.

ச-மு. போடா! இஸ்பெட் காயிதந்தான் கொண்டா சீக்கிரம்.

ச. இதோ கொண்டாந்தூட்டேம்பா. [விரைந்து போகிறுன்.]

ச-மு. இவனெ கட்டிகினு அழுராது போதுமின்னு போவுது !

சபாபதி சீட்டுக்கட்டை எடுத்துக் கொண்டு வருகிறுன்.

ச. இத்தெ மின்னுலே சொல்லக்கூடாதாப்பா ?

ச-மு. கொடுடா இப்படி. [அதைக் குலுக்கிக்கொண்டே] நாலுபேர் இருந்தா சரியாயிருக்கும் ஆட்டம்—

ச. அப்பா, எனக்கு கூட, இஸ்பெட் ஆடத் தெரியும்பா கொஞ்சம்—

ச-மு. சத்! அதனப் பிரசங்கி!—தெருவுலே போயி தெரிஞ்சவங்க யாராணுலுமிருந்தா இட்டுகுனு வா—நிக்காதெ போ! [சபாபதி போகிறுன்.]

[சீட்டைக் குலுக்கிப் போட்டுக்கொண்டு] நாலாவது கை வர்ர வரைக்கும் மூன்னாத்தி நாலுதான் ஆடுவோம்.

சபாபதி மறுபடி விரைந்து வருகிறுன்.

ச. அப்பா! அப்பா! நாலாவது கை ஆப்டுது அப்பா இதோ இட்டாந்தேம்பா !

சின்னசாமி முதலியார் மெல்ல வருகிறுர்.

சி. அப்பேன் தம்பி—

ச-மு. யாருடா அது ?

ச. தமிழ் வாத்தியாரப்பா.

ச-மு. [ஒரு புறமாக] ஏண்டா! இவரெ யாரடா இட்டாரச் சொன்னது ?

ச. தெரிஞ்சவங்க யாரையானாலும் இட்டாரச் சொன்னையேப்பா,

சி. அப்பேன், என்னை என்னத்திற்குக் கூட்பிட்டே ?

ச-மு. இதோ உக்காருங்க வாத்தியார்.

[பரபரப்புடன் சீட்டையெல்லாம் சேர்த்து வைத்து விட்டு தன் சிநேகிதர்களுக்குக் கண்ணால் சைகை செய்து அவர்களை அனுப்பி விடுகிறான்.]

சி. நம்ம ஆள் வந்து — என்னமோ — ஒரு கை குறைவா யிருக்குது — உங்களெ அவசரமா அழைக்கிறாங்க, இண்ணு சொன்னான் — உடனே வந்தேன்; அதென்ன குறைவாயிருக்குது?

ச-மு. ஒரு பாட்டுக்கு கொஞ்சம் அர்த்தம் குறைவாயிருக்குது தெரியலே — அதுக்காக தமிழ் வாத்தியார் போனா அழைச்சிகினுவா, அர்த்தம் கேக்கணும் இண்ணு சொல்லி அனுப்பிச்சா, இந்த தடிக்கழுதை தப்பா சொன்னான்!

ச. நானாப்பா தடிக்கழுதெ?

ச-மு. சத் பேசாதிரு! வாயெ தெறந்தையோ பாரு!

சி. என்ன பாட்டப்பேன் அது ?—இந்தப் புத்தகத்திலா ?

[சீட்டுக்கட்டை எடுக்கப் பார்க்கிறார்]

ச-மு. இல்லே! இல்லே! [அதை எடுத்துக்கொண்டு]

திருவாசகத்துலே "நாடகத்தால் உன்னடியார் போல்" என்ற பாட்டு.

சி. ரொம்ப சுலபமாச்சே — சொல்றேன் கேள்—நாடகத் தால் — நாடகத்தால், உன்னடியார் — உன்னடியார், போல் — போல, நான் — நாணகப்பட்டவன், அடித்து-அடித்து, வீடகத்தே - வீடகத்தே, புகுந்திடுவான்-புகுந் திடுபவன், மிகப் பெரிதும்-ரொம்ப பெரிதாகவும், விரை கின்றேன்—விரைக்கின்றேன், ஆடகச் சீர்—ஆடமாகிய சீர், மணிக்குன்றே - மணியாகிய குன்றே, இடையரா - இடையராகிய, அன்புனக்கு - அன்புனக்கு—

[பின்புறமாக மாணிக்கமுதலியார் மெல்ல வந்து நிற்கிறார்]

என்னூடகத்தே—என் வூட்டினுடைய அகத்தே, நின்றுருக - நின்றுருக, தந்தருளேன் - தந்தருளேன், உடையானே - உடையவனே — அவ்வுளவுதான் அர்த்தம், ரொம்ப சுலபமாச்சே.

மா. ரொம்ப அழகா யிருக்குது! இந்த மாதிரி அர்த்தம் சொன்னு, அவனுக்குத் தமிழ் நண்ணு வந்தூடும்!

சி. ஆ! — பெரிய மொதலியாரவாளா? பாக்கலே—ஏ! மன்னிக்கணும்.

மா. மன்னிக்கரது அப்பறம் இருக்கட்டும், இந்த மாதிரி நீங்க பாடஞ்சொல்லி அழுதா, அவன் பாஸ் பண்ணுப் போலெத்தான்! ரெண்டு வரி தமிழ் சரியா எழுதத் தெரியலே—

சி. இல்லேங்க—நீங்க ஒரு வியாசம் எழுதச் சொன்னேகளே அது பதினெட்டு பக்கம் சரியாக எழுதினதாகச் சொல்லுச்சே அப்பென்.

மா. அத்தெ கேக்கத்தான் வந்தேன்; அந்தபதினெட்டு பக்கம் எழுதின அழகே! [வியாசத்தை அவர் கையில் கொடுக்கிறார்]

சி. [வாங்கிக்கொண்டு] இருக்குங்க, பதினெட்டு பக்கம் இருக்கும்.

மா. பதினெட்டு பக்கம் இருக்கரது சரிதான் — படிச்சிப் பாருங்கையா.

சி. [படிக்கிறார்] "இருப்புப்பாதை வியாசம்—இருப்புப்பாதை என்றால், இருப்புப்பாதை என்று அர்த்தம்"—

மா. சரிதான், நீங்க அர்த்தம் சொல்லிக் கொடுக்கிற மாதிரி தான் அவனும் எழுதரான்—அப்புறம்.

சி. [படிக்கிறார்] "மட்ராசில் சௌத் இண்டியன் றெயில்வே, மட்ராஸ றெயில்வே என்று, ரெண்டு றெயில்வேக்களிருக்கின்றன"

மா. என்னு ஐயா இது தமிழா?—அப்புறம் படிங்க.

சி. [படிக்கிறார்] 'சௌத் இண்டியன் ரெயில்வே மட்ராசிலிருந்து புறப்பட்டு குப் குப் குப் குப்!—குப் குப்—குப்''...அப்பேன்! இது என்ன அப்பேன்?..

ச-மு. உங்களுக்கு சரியா படிக்கத் தெரியலே வாத்தியார்—நான் படிக்கிறேன் பாருங்க. [படிக்கிறான்]

"சௌத் இண்டியன் றெயில்வே, மட்ராசிலிருந்து புறப்பட்டு, குப்—''

சி. அப்பேன், என்னப்பேன் இந்த குப் குப்?

ச-மு. பொகை போறது.

சி. ஓ—எவ்வளவு தூரம் போவுது?

ச-மு. செங்கல்பட்டு வரைக்கும்.

சி. என்ன! இந்த குப் குப் செங்கல்பட்டு வரைக்குமா போவுது?

ச-மு. இல்லாப்போனா றெயில் நிண்ணுபூடாதா?

மா. பாத்தைங்களா வியாசம் எழுதின அழகெ?

சி. [பக்கங்களைத் திருப்பி பார்த்து] அப்பேன், அந்த குப் குப் தவிர, வேறென்னமான எழுதி இருக்கிரையா?

ச.மு. எழுதியிருக்கிறேன் சாமி.

மா. எழுதியிருக்கரான்!—அத்தெயும் படிக்கச் சொல்லுங்க.

சி. அதெ படியப்பேன்.

ச.மு. [ஏழு பக்கங்களைத்தள்ளி] பிறகு — செங்கல்பட்டைக் கடந்து போகும்போது பாலாறு பிரிட்ஜ் (bridge) வரும் போது அதன் பேரில் கட கட கட கட கட கட கட வென்றும், பட பட பட பட பட பட பட வென்றும், கட கட பட பட, பட பட கட கட, கட கட பட பட, பட பட கட கட, கட கட பட பட, பட பட கட கட—

சி, உம்—இந்த கட கட, பட பட எவ்வளவு?

ச.மு. பிரிட்ஜ் தாண்டர வரைக்கும்.

சி. இல்லெ எத்தினி பக்கம் எழுதி யிருக்கரெ இண்ணு கேட்டேன்—

மா. [சபாபதி கையிலிருந்து வியாசத்தைப் பிடுங்கிக் கொண்டு] கட கட பட பட அஞ்சி பக்கம், குப் குப் ஏழ பக்கம் வியாசம் தீர்ந்து போச்சி !

[அதைக் கிழித்துத் தமிழ் வாத்தியார் தலைமீது போடுகிறார்]

இதுக்கு பரிட்செ ஒண்ணு! தமிழ்வாத்தியார் ஒண்ணு

திரிபுரம்மாள் விரைந்து வருகிறார்கள்

தி. அதென்னு போங்க? இப்ப போயி நாயினுமேலெ கோவிச்சிகரைங்களே! அதோ கோளப்பஞ் சேரியம்மா வந்திருக்கிராங்க புள்ளெயெ பாக்க!

ச.மு. உம்! உம்! [அழுகிறான்]

மா. ஆமாம், கண்ணுலம் ஒண்ணுதான் கொறைச்சல் பிள்ளை யாண்டானுக்கு !—கண்ணுலத்தையும் பண்ணிவுடு, அப்புறம் அவன் படிச்சாப்போலெத்தான் !

தி. ஆமாம்! நீங்க படிச்சி பாஸ் பண்ணிபுட்டைங்களே—கெடக்கட்டும், நீங்க கிளப்புக்கு (club) போங்க!

மா. சரி, உம்பாடு—இப்படித்தான் அவனெ செல்லங் கொடுத்து கெடுக்கரெ !—நான் வர்ரேன், [போகிறார்]

தி. ஐயா, வாத்தியாரெ, இண்ணைக்கு பாடம் சொல்லிக் குடுத்தது போதுங்க—நாளைக்கி வந்தூடுங்க சீக்கிரம்.

சி. அப்படியெ அம்மா.

[போகும் பொழுது சீட்டுக்கட்டை எடுக்கிறார்]

ச. ஏ ! அதென்னுது வாத்தியாரே, இத்தெ தூக்கிகினு போரைங்களே ?

சி. இதுவா ?—ஓ ! புஸ்தகம் இண்ணு பாத்தேன்.

ச. பாப்பைங்க பாப்பைங்க !—வைச்சூட்டுப் போங்க இத்தெ.

[வாங்கிக் கொள்ளுகிறான் ; சின்னசாமி முதலியார் போகிறார்]

தி. நாயினு, கண்ணெ தொடச்சிக்கோ நாயினு!—கோளப் பஞ்சேரி யம்மா உன்னெ பாக்க வந்திருக்கராங்க'— இந்தா தலயெ வாரிகொ—அடே சபாபதி, தம்பிக்கு சரிகெ அங்கவஸ்திரம் கொண்டாந்து குடு.

[சபாபதி அப்படியே செய்கிறுன்]

இப்படி உட்காந்துகினு என்னமாறு படிச்சிகினு இரு— அவங்களெ இட்டுக்கினு வர்ரேன். [போகிறுர்]

ச.மு. அடே சபாபதி—அவங்க வந்த பிற்பாடு நானு என்னமாறு புஸ்தகம் பேர் சொல்றேன்—நீ போயி, மெத்த மேலே நாயினு லைப்பெரரி(library) யிலே யிருக்கிர புஸ்தகங்கள்ளெ, பெரிய புஸ்தகமா ரெண்டு மூணு கொண்டா.

ச. அப்படியே செய்யரேம்பா—நீ பயப்படாதே!

திரிபுரம்மாள். தெய்வயானை அம்மாளை அழைத்துக்கொண்டு வருகிறுர்கள், பின்றல் கிருஷ்ணசாமி மெல்ல வருகிறுன்.

தி. இப்படி வாங்க மச்சி!—நம்ப கொழந்தெயாச்சி—நீங்க பாக்கரத்துக்கென்ன?

தெ. படிச்சிகினு இருக்கராப் போலெ இருக்குது!

தி. அதெயேன் சொல்ரைங்க மச்சி—என் நேரமும் புஸ்தகமும் கையும்தான்—சும்மா படிச்சி படிச்சி....

ச. மூளையெல்லாம் கரைஞ்சி பூடுதம்மா—அதுக்குத்தான் நான் படிக்கிரதில்லெ.

ச.மு. அடே சபாபதி, நீ மெத்தெமேலே போயி என் சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா இண்டிகா (Encyclopaedia Britanica Indica) எடுத்துவா.

ச. இதோ அப்பா. [விரைந்து போகிறுன்]

தெ. தம்பிக்கு என்ன வயசாவுதுங்க?

தி. இப்பதாம் பதனாறு வயசாவுதுங்க.

தெ. போன வர்ஷம் கேட்டபோது பதனேழு இண்ணீங்களே?

தி. ஆமாம் மச்சி, அது வாஸ்தவம்தான்; அப்புறம் ஜோஸ்யரே கேட்டோம், அவரு ஜோஸ்யம் பார்த்து, இப்ப பதனாறு வயசுதாம் ஆவுது இண்ணாரு.

சபாபதி மூன்று பெரிய புஸ்தகங்களை தூக்கமாட்டாததுபோல் தூக்கிக் கொண்டு வருகிருன்.

ச. இந்தாப்பா!

ச.மு. மொள்ளமா வைடா கழுதே!

சு. கழுதையா? என்னப்பா இது! ரொம்ப பளுவா இருக்கர புஸ்தகமா தூக்கிவரச் சொல்லிட்டு, இப்ப திட்டரையே.

ச.மு. சரிதான் வாயெ மூடு! படிக்கும்போது டிஸ்டர்ப் (disturb) பண்ணாதே.

[படிப்பது போல் பாசாங்கு செய்கிருன்.]

தெ. தம்பி, நூஸ்பேப்பர் (news paper) படிக்குதுங்களா?

ச.மு. சபாபதி, மெத்தமேலெ போயி, ஹிண்டு ஆப் தி டைம்ஸ் (Hindu of the times) கொண்டுவா.

ச. இதோ அப்பா [போகிருன்]

தி. இந்தப் பாழாப்போன நூஸ் பேப்பர் வந்தாலும் வந்தது ராத்திரி யெல்லாம் நூஸ் பேப்பர்தான்.

சபாபதி மெயில் (Mail) பேப்பருடன் வருகிருன்.

ச.மு. எத்தனி நாழிடா கொண்டுவர?

ச. என்னப்பா அது, நானு எவ்வளவு வேகமா ஓடி வந்தேன், வரும்போது கூட ஒரு க்ளாஸ் டம்ளரெ (glass tumbler) ஒடிச்சூட்டேன் வர்ர வேகத்துலெ!

ச.மு. போனப்போவுது, கொடு, இப்படி.

[வாங்கிப்படிப்பதுபோல் பாசாங்கு செய்கிருன்]

தெ. இங்கிலீஷ்கூடப் படிக்குதுங்களா தம்பி?

தி. அடெ சபாபதி—நாயினவே ஒரக்க படிக்கச் சொல்லு.

ச. என்னப்பா, நீ மாத்திரம் படிச்சிகினெ, எனக்கு தெரியத் தேவலையா? ஒரக்கப் படிப்பா.

ச.மு. இப் டு டிரையாங்கில்ஸ் ஹேவ் டு சைட்ஸ் ஆப் தி ஒன் ஈக்வல் டு டு சைட்ஸ் ஆப் தி அதர், அண்ட் தி ஆங்கில் கன்டெயின்ட் பை தி டு சைட்ஸ ஆப் தி ஒன், ஈக்வல் டு தி ஆங்கில் கன்டெயின்ட் பை தி டு சைட்ஸ் ஆப் தி அதர், தென் தேர் பேசஸ் ஆர் தர்ட் சைட்ஸ் ஷேல் பி ஈக்வல், தி டு டிரையாங்கில்ஸ் ஷெல் பி ஈக்வல், அண்ட் தேர் அதர் ஆங்கில்ஸ் ஷெல் பி ஈக்வல் நேம்லி தோஸ் டு விச் தி ஈக்வல் சைட்ஸ் ஆர் ஆபொசிட். (If two triangles have two sides of the one epual to two sides of the other, and the angle contained by the two sides of the one, equal to the angle contained by the two sides of the other, then their bases or third sides shall be equal, the two triangles shall be equal, and their other angles shall be equal, namely these to which the equal sides are opposite.)

ச. இரு இரு அப்பா, சும்மா நீயே படிச்சிகினு போறு, எனக் கென்னுப்பா தெரியும் !—அத்தே தமுழ்லே சொல் லப்பா.

ச.மு. ஒ எஸ் (Oh ! yes) ஒனக்கு இங்கிலீஷ் தெரியாதல்லா ? சொல்ரேன் கேளு — இப்பவும் சென்னபட்டணத் திலெ வர்த்தகருங்கல்லாம், போட்டிபோட்டுகினுலாபம் சம்பாதிக்கரத்துக்காக, கெர்சின் ஆயில் (kerosine oil) எண்ணெயின் வெலெயெ ரொம்ப ஒஸ்திவிட்ட தாகவும், அதனுலெ ஜெனங்களுக்கெல்லாம் ரொம்ப கஷ்டமா யிருக்கிறதாகவும், கவர்ன்மெண்டார் அவர் களுக்குத் தெரிவிச்சிகினுங்களாம்.

ச. உம்—அதுக்கு இந்த கவுமெண்டாரு என்ன பதில் சொன்னுங்களாம் ?

ச.மு. பட் இப் தி சைட் ஏபி, இஸ் ஈக்வல் டு தி சைட் டிஇ, அண்ட் தி சைட் ஏசி இஸ் ஈக்வல் டு தி சைட் டிஎப், அண்ட் தி ஆங்கில் பிஏசி, இஸ் ஈக்வல் டு தி ஆங்கில் இடிஎப்—(but if the side AB is equal to the side DE, and the side AC is equal to the side DF and the angle BAC is equal to the angle EDF)

ஆனால் கவர்ன்மென்டார் அதுக்கு பதில் என்ன சொன்னாங்க இண்ணா, கெர்சினாயில் எண்ணெ வெலெ அதிகமா போனா, எல்லோரும் வீட்லெ எலெக்டிரிக் லேட் (electric light) போட்டுக்கொள்ள வேண்டியது இண்ணு பதில் சொல்லிவிட்டார்களாம்—அம்மா, நம்ப வூட்லெகூட அண்ணாகிட்ட சொல்லி எலெக்டிரிக் லேட் போட்டுடச் சொல்லுங்கம்மா.

ச. இதிருக்கட்டும்பா—மகாராஜருங்கதான் எலிகட்டுலேட்டு போட்டுக்கராங்க—ஏழைங்க என்னப்பா செய்யரது? அது என்னமானா போட்டு இருக்குதா பாரப்பா.

ச.மு. எழுதியிருக்கிறது, கேளு—அண்ட் தேர்போர் தி டிரை ஆங்கல்ஸ் ஆர் ஈக்வல் டு ஒன் அநெதர்—and therefore the two triangles are equal to one another) ஏழைங்களா இருக்கரவங்க எலெக்டிரிக் லேட் போட முடியாப்போனா, மொழுக்கு வத்தி உபயோகிச்சிக் கொள்ளவேண்டியது ஊட்டுங்கள்ளே, இண்ணு தெரி விக்கிராங்களாம்.

ச. அடடெ! இந்த யோசனெ எனக்கு தோணாதபோச்சே இதுவரைக்கும்!—இந்த வெள்ளக்காரன் யுக்தியே யுக்தியப்பா!—அதெல்லாம் இருக்கட்டும்பா, எங்க ஊர்லெ மழெ பேஞ்சிதா பாரப்பா.

ச.மு. எந்த ஊரு, உங்க ஊரு?

ச. ஆத்தூரப்பா—செங்கல்பட்டு கிட்ட.

ச.மு. இதோ பாத்து சொல்ரேன்—ஓ! ஹியர் இட் இஸ் (Oh! here it is) "இந்தி டிஸ்டிரிக்ட் ஆப் செங்கல்பட் ஆல்ரைட் ஆங்கல்ஸ் ஆர் ஈக்வல்டு ஒன் அநெதர் (In the District of Chingleput, all right angles are equal to one another) செங்கல்பட்டு ஜில்லா முழுமையும் கொஞ்சம்கூட மழெ பேயலெ யில்லையாம்.

ச. அடடா! அப்புறம்?

ச.மு. அண்ட் தேர் போர்—(and therefore) ஆகவே தானி யங்க வெலெ யெல்லாம் அதிகமாயி, ஜனங்களெல் லாம் ரொம்ப கஷ்டப்படராங்களாம், சில ஜனங்கள் காஞ்சிபுரத்துலெ கலகம் பண்ணி கொள்ளையடிச் சாங்களாம்.

ச. என்னுப்பா அது, இங்கில்சுலே இவ்வளவுண்டு சொன்னே, தமுழ்லே அதுக்கு இவ்வளவு பெருசா அர்த்தம் சொல்ரையே ?

ச.மு. இங்கிலீஷ் இண்ணு அப்படித்தான்.

தி. போதும் நாயினு படிச்சது—அப்புறம் ஓடம்பு கெட்டுப் போவப்போவுது.

தெ. ஆமாம் அண்ணி — நிறுத்தச்சொல்லுங்க, ரொம்ப படிச்சா ஓடம்புக்கு சூடு இண்ராங்களே.

ச. ஆமாம்மா, படிச்சி படிச்சி அப்பாவுக்கு ரொம்ப சூடா போவுதம்மா — நீங்க இன்னொருதரம் வர்ரப்பொ, கொஞ்சம் பாதுமல்வா கொண்டாங்க.

ச.மு. அடே சபாபதி !

ச. இல்லெப்பா, நீதானே சொன்னேப்பா, பாதுமல்வா இஷ்டமிண்ணு.

ச.மு. சரிதான், வாயெ மூடு.

தெ. தம்பி — பாஸ் பண்ணி யிருக்குதுங்களா ?

தி. பாசுக்கென்னு மச்சி — பத்து ரூபா பரீட்சைக்கு போயி இருக்குது—இந்த வர்ஷம் பத்துரூபா கட்டியிருக்குதே, பரீட்செ பண்ரவங்களுக்கு — பாசு கொடுக்காதிருப் பாங்களா ?

தெ. சரிதான் மச்சி—அப்பொ—நாழியாவுது—நானு வரட் டுமா ?—

தி. இன்னம் கொஞ்சம் இருந்து போங்களேன் ? இதுக் குள்ள என்னு அவசரம் ?

தெ. இல்லே நாழியாச்சி—அடே கிருஷ்ணசாமி — போய் சொல்லிவிட்டு வாடா ! — உம் — வெக்கமென்னு ? — உங்க அத்தானு ஆவப்போராரு, அவரோடே பேசரத் துக்கு வெக்கமென்னு உனக்கு ?

கி. [சபாபதி முதலியார் அருகில் போய்] நான் போயி வர்ரேன்.

ச.மு. அல்லோ (hallo !) வா தம்பி—உன்னெ பார்க்கவே யில்லே இதுவரைக்கும்—வா உக்கார்—என்னு சமா சாரம் ?—நண்ணு படிக்கரையா ? எந்த கிளாஸ்லே (class) படிக்கரெ ?

கி. ஐ ஹாவ் அப்பியர்ட் பார் தி மெட்ரிகுலேஷன் எக்சாமினேஷன். (I have appeared for the matriculation examination.)

ச. ஓ!—ஐ சீ! (Oh! I see) மெத்த கிளாட் (glad) ரொம்ப சந்தோஷம். ஹோப் வில் பாஸ் (hope will pass), எஸ்ஸே (essay) எத்தனை பேஜ் (page) எழுதனெ தம்பி?

கி. அஞ்சி பக்கம் எழுதனேன்.

ச.மு. ஓ! யூஸ்லெஸ்! (oh! useless) பிரயோஜனமில்லே! ஒரு பத்து பக்கமாவது எழுதணும். நீ பெயில் (fail) ஆயிபூடுவே இண்ணு நெனேக்கரேன்! டஸ் நாட் மாட்டர், (does not matter) இந்த நாட்டுப்புறத்து பள்ளிக்கூடங்கள்ளெ யெல்லாம் படிக்கிரது இதுதான் தப்பு.—நீ சென்னப்பட்டணம் வந்தூடப்பேன்.—அது தான் நல்லது.

தெ. அவங்க அக்காளுக்கு கல்யாணமாரு, அவனும் இங்கே வந்தூடமாட்டாரு படிக்க.

ச.மு. மெத்த கிளாட் (glad), நீ போய்வா தம்பி.

கி. நான் வர்ரேன்.

[திரிபுரம்மாள் தெய்வயானையம்மாள்,
கிருஷ்ணசாமி போகிறார்கள்]

ச. அப்பா, உனக்கு கண்ணாலமாகரப்பொ, எனக்கு ஒரு சரிகெ தலெ குட்டே வாங்கி கொடுக்கணும்பா, இப் பவே சொல்லிட்டேன்.

ச.மு. அடே, எல்லாம் ஆகட்டும்—அப்புறம் பாத்துகலாம்.

காட்சி முடிகிறது

இரண்டாம் காட்சி

இடம்—அதேயிடம்

சபாபதி முதலியார் நாற்காலியின்மீது உட்கார்ந்து ஓர் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார். **சபாபதி** எதிரில் நிற்கிறான்.

ச.மு. எல்லாம் பாக் (pack) பண்ணியாச்சா ?

ச. இப்பதான் அல்லாம் வைச்சிகினு இருக்கரேம்பா, இதுக்குள்ளெ நீ கூப்டையெ இண்ணு வந்தேன்.

ச.மு. எத்தனி நாழிடா பாக் பண்ண ? சீக்கிரம் ஆகட்டும், மாமா அவுங்கள்ளாம் வர்ர வேளெ ஆச்சி, வந்த வுடனே சாயங்காலம் பொறப்பட்டுப் போவணும் அவுங்க வீட்டுக்கு.

ச. என்னுப்பா விசேஷம் ?

ச.மு. பொங்கல் விருந்துக்குக் கூப்பிட வர்ராங்க.

ச. ஓ ! அப்போ சீக்கிரம் பாக் பண்ணிடமாட்டே.

ச.மு. இந்தா, எல்லாம் பாக் பண்ணியானப்புறம் இந்த காயி தத்தெ, பக்கத்து தெரு முருகேசம் கிட்ட கொண்டு போயி கொடுத்தூட்டு வா.

ச. என்ன காயிதம்பா இது ?

ச.மு. அடே அதனப்பிரசங்கி! அதெல்லாம் ஒண்ணும் கேக்கக் கூடாது இண்ணு சொல்லலெ நானு ?

ச. இல்லெப்பா, எனக்கொரு தலெ குட்டெ வாங்கி குடுக்க ரேண்ணையெ, அத்தெ பத்தி எழுதனையோ ஒருவேளெ, இண்ணு கேட்டேன்.

ச.மு. தலெ குட்டெ யெல்லாம் அப்புறம்தான், இப்பொ இல்லெ, போ—அதோ மாமா வர்ராப்போலெ இருக்குது சீக்கிரம் போய் பாக் பண்ணிவை. [சபாபதி போகிறான்]

குப்புசாமி முதலியாரும் கிருஷ்ணசாமியும் வருகிறார்கள்

ச.மு. அல்லோ (hallo) நெவர் எக்ஸ்பெக்டட் ! (never expected) வாங்க மாமா, வாங்க, வா தம்பி, நீங்க வர்ரது எனக்கு தெரியவெ தெரியாதே! வர்ரதாக ஒரு

கார்டு (card) போடக்கூடாது? — உக்காருங்க, உக்காருங்க.

கு. உங்க நாயினுவுக்கு ஒரு காயிதம் எழுதனேனே.

ச.மு. அவருக்கு எழுதி பிரயோஜனமில்லெ— இப்பொ அவுங்க இந்த முனிசிபல் எலெக்ஷன் (Municipal Election) விஷயமா ரொம்ப பிசி (busy) யாயிருக்கராங்க. நீங்க எனக்கு நேரா யெழுதியிருக்கணும்—டஸ் நாட் மாடர் (does not matter) பரவா யில்லெ—என்னு தம்பி, என்னு விசேஷம்? ஏது இப்படி வந்தது?

கி. இண்ணைக்கி செனெட் அவுஸ்லெ (Senate House) ரிசல்ட்ஸ் (results) ஒட்ராங்க இண்ணு சொன்னுங்க, அத்தெ பாத்துட்டு போகலாமிண்ணு வந்தேன்.

ச.மு. ஓ! ஐ சீ! (oh ! I see) அதுக்கா வந்தெ?—அப்பொ, போயி சீக்கிரம் பாத்துட்டு வா அப்பேன்.

கி. நீங்களும் வாங்களேன்? உங்க ரிசல்டு (result) பார்க்க வேணுமா?

ச.மு. என் ரிசல்டெ (result) பத்தி சந்தேகமில்லெ...அதுலெ என்னு ராங்க் (rank) போட்டிருக்குமா என்னு? சும்மா பஸ்டு கிளாஸ் (first class) இண்ணு போட்டிருக்கும், அவ்வளவுதான் — இல்லாப்போனு பெயில் (fail) இண்ணு போட்டிருக்கும், அவ்வளவுதான்.

கு. அது ஏன் அப்படி?

ச.மு. வேறொண்ணு மில்லெ....இங்கிலீஷ் பேபர்லெ (paper) கொஞ்சம் சந்தேகமா யிருக்குது—கிளியர் (clear) பண்ணி யிருக்கறென்! நாயமா வெரி நியர் மாக்சிமம் (very near maximum) வரணும், ஆனலும், இந்த வர்ஷம் ரே எக்சாமினர் (Rae, examiner) இண்ணு சொல்ராங்க. ஒரு தரம் ஒரு மிடிங்லெ, (meeting) அவனெ எதிர்த்து பேசனேன், அப்பொ, ஆல் ரைட் ஐ வில் சி (all right, I will see) இண்ணு சொன்னு, அது மொதல் எம்பேர்லெ கொஞ்சம் காரமாயிருக்கரா.

கு. என்னமா இருக்கரா?

ச.மு. காரமா—அதாவது கோவமா யிருக்கரா, அத்தொட்டு எம் பேபர் இண்ணு தெரிஞ்சுதோ, சுழிச்சூடுவான், அதாம் ஒரு பயம். அத்தெ கவனிக்கா போணு பஸ்டு கிளாஸ் பஸ்டு பாய் (first class first boy); கவனிச்சாண்ணு, பெயில் (fail); அத்தொட்டு என் ரிசல்டெ பத்தி நீங்க பார்க்கத் தேவலெ—தம்பி ரிசல்டு (result) மாத்திரம் பாத்துகினு வரட்டும் — அதிருக்கட்டும், வேறென்னுப்பேன் சமாசாரம்?

கி. வேறொண்ணு மில்லெ.

கு. என்னுடா கிருஷ்ணசாமி, வந்த வேலெயெ மறந்து பூடரெ! உங்க அத்தானே, பொங்கல் விருந்துக்கு வரச் சொல்லி கூப்பிடரா.

கி. ஆமாமாம், மறந்துபூட்டேன் — அத்தான், பொங்கல் விருந்துக்கு, நீங்களும், அல்லாரும், ஊருக்கு வரணும்.

ச.மு. ஓ! ஐ சீ! (Oh! I see!) இதுக்குள்ளே பொங்கல் வந்தூட்டுதாப்பேன்? இப்பொதாம் போணுபோலெ இருக்குது—எப்போ, பொறப்படரது அப்பேன்?

கி. இண்ணைக்கி சாயங்காலமெ புறப்படலாம்.

ச.மு. ஐ டோன்ட் திங்க் இட் பாசிபில் (I don't think it possible) இண்ணைக்கி முடியாது போலெ இருக்குதெ ஐ திங்க் ஐ ஹாவ் காட் டு அட்ரெஸ் எ மிடிங் (I think I have got to address a meeting) எதுக்கும் பார்க்கரேன்—அடே சபாபதி—சபாபதி!

ச. [உள்ளிருந்து] இதோ வர்ரேம்பா.

ச.மு. வா சீக்கிரம்.

சபாபதி வருகிறான்.

எத்தனி நாழிடா வர்ரதுக்கு?

ச. எல்லாம் கட்டி வைக்கரத்துக்கு நாழியாச்சப்பா.

ச.மு. என்னுத்தெ கட்டி வைக்கிரத்துக்கு?

ச. மாமா வந்து பொங்கல் விருந்துக்கு கூப்புடுவாங்க, சாயங்காலம் போவணும், மூட்டை யெல்லாம் கட்டி வையிண்ணேயேப்பா.

ச.மு. அதனப் பிரசங்கி! அத்தெ யெல்லாம் யார்டா கேட்டது உன்னெ? நீ போயி மெத்தமேலெ என் என்கேஜ் மென்ட் லிஸ்டு (engagement list) மேஜெ மேலெ வைச் சிருக்கிரேன், கொண்டா இப்படி.—ஓ! வாணாண்டா, இதோ இருக்குது—

[ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்து]

ஓ! ஐ சீ! (Oh I see) அந்த மீடிங் நேத்தே ஆயிபூட்டுது. இண்ணைக்கி சாயங்காலமெ பொறப்படலாம்பேன்.

கி. அதுக்குள்ள நான் போயி ரிசல்ட்ஸ் பாத்துட்டு வர்ரேன்.

ச.மு. இதுக்குள்ள என்னுப்பேன் அவசரம்? அதெல்லாம் நாலு மணிக்கு மின்னெ ஒட்டமாட்டாங்க.—எல்லாம் கொஞ்சம் பொறுத்து போகலாம்—கொஞ்சம் தாகத் துக்கு சாப்பிட்டுட்டு போங்க—உனக்கென்னு வேணும் அப்பேன்? — சோடா (soda) சாப்பிடரையா, லெம னேட் (lomonade) சாப்பிடரையா?

கி. சோடா சாப்பிடரேன்.

ச.மு. அடே சபாபதி, சீக்கிரம் ஒரு சோடா புட்டியெ ஒடச்சி கொண்டா,

ச. ஏ!—அது கெட்டு பூடும்பா அப்புறம்.

ச.மு. அதனப்பிரசங்கிக் கழுதெ! சொன்னபடி செய் முன்னெ! குறுக்கே குறுக்கே பேசிகினு!

ச. இப்பவே சொன்னேம்பா! அப்புறம் எம்மேலே கோவிச்சிகினு பாரு! [போகிருன்]

ச.மு. நீங்க மாமா?

கு எனக்கு ஒண்ணும் வேணும்பேன்.

ச.மு. இல்லெ, ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்க.

கு. ஆனு — இந்த சோதா வேணும்—கொஞ்சம் காப்பி சாப்பிடரேன்.

ச.மு. ஹாட் காபி (hot coffee) சாப்பிடரைங்களா? ஐஸ்டு (iced) காபி சாப்பிடரைங்களா?

கு. அப்படிண்ணு ?

ச-மு. ஓ! உங்களுக்கு அந்த டிபரன்ஸ் (difference) தெரியாதோ? உனக்கு தெரியுமாப்பேன் ஐஸ்டு காபி எப்படி ப்ரிபேர் (prepare) பண்ரது இண்ணு?

கி. தெரியாது.

ச-மு. ஐஸ்டு காபி இண்ணு. சாதாரணமா நாட்டுப்புறத்தார் காபியிலே ஐஸ் (ice) போடரது இண்ணு நெனைச்சிகிவாங்க—அது ரொம்ப தப்பு. ஐஸ்டு காபி இண்ணு, காபி பொடி பண்ணும்போதே, ஐஸ்லே போட்டு பொடிபண்ணணும். நான் டியான்ஜிலிஸ் (D'angelis)லே விசாரிச்சி தெரிஞ்சி வந்திருக்கிறேன்; அது ரொம்ப டிபிகல்டு (difficult) ப்ரிபேர் (prepare) பண்ண.

கு. அப்பேன், எனக்கு ஐஸ் வாணும், சுடசுடவே யிருக்கட்டும்.

சபாபதி ஒரு தட்டில் ஒரு சோடா புட்டியைத்
துண்டு துண்டாக உடைத்து வைத்துக்கொண்டு வருகிறான்.

ச. பாத்தையா அப்பா! அப்பவே சொன்னேனெ புட்டியெ ஒடெச்சா கெட்டுபூடும் இண்ணு! ஒடெச்ச உடனே தண்ணியெல்லாம் புஸ் இண்ணு பூட்டுதப்பா!

ச-மு. வாட் நான்சென்ஸ்! (what nonsense!) உன்னை யார் புட்டியெ ஒடெக்கச் சொன்னது?

ச. நீ தானே அப்பா சொன்னே? அப்பவே நானு வேணும் இண்ணனே!

ச-மு. தெறந்து கொண்டுவாடா இண்ணு!

ச. தெறக்கரதா? எப்படியப்பா? நீ சாவி கொடுத்தெயா?

ச-மு. டாம் இடியட்! (Damn idiot) நீ ஒண்ணுக்கும் ஒதவ மாட்டெ போ!

ச. போரேம்பா.

ச-மு. இங்கே வா இப்படி! உள்ளே போய் காபி (coffee) யாவது சுடசுட கொண்டுவா! அத்தெ தொடத்தே வலே! அத்தெயும் கெடுத்து வைக்கப்போரே! தெரியுமா?

ச. தெரியும்பா.

ச,மு. போறு போவுது தம்பி. வில்யூ ஹாவ் சம் டீ (Will you have some tea)?

கி. எஸ் (yes)

ச-மு. சபாபதி!

ச. [உள்ளிருந்து] ஏன்?

ச-மு. அப்படியே ஒரு டம்ளர் டீ (tea)யும் கொண்டுவா சுடச் சுட!

சபாபதி ஒரு தட்டில் ஒரு டம்ளர் காபியும்
ஒரு டம்ளர் தேத்தண்ணீரும் எடுத்துக்கொண்டு வருகிறான்.

ச-மு. அவங்க நடுவிலே வை அதை.

[அப்படியே வைக்கிறான்; குப்புசாமி முதலியாரும் கிருஷ்ணசாமியும் அதைத் தொட்டு அப்பப்பா! என்கிறார்கள்.]

ஏண்டா! சபாபதி! இவ்வளவு கொதிக்க கொதிக்கவா கொண்டாரச் சொன்னேன்?

ச. எனக்கென்னமாப்பா தெரியரது? தொடத்தேவலெ இண்ணையே என்னெ?

ச-மு. ஆல் ரைட்! (all right) உனக்கு சரியான பனிஷ்மெண்ட் (punishment) கொடுக்கணும்; இத்தெ ரெண்டையும் ஆத்திக் கொண்டு வா சீக்கிரம்; கை சுடட்டும் உனக்கு! [சபாபதி போகிறான்]

நீங்க என் நியூ போடகிராப் (new photograph) கேட்டதில்லேங்களே?

கு. என்ன அது?

ச-மு. நியூ போடகிருப் (new photograph), அது என்னம்மா பாடு திண்ரைங்க; வெரி குட் மியூஜிக் (very good music) தாகத்துக்கு சாப்பிட்ட வுடனே அத்தெ கொஞ்ச வாசிக்கரேன். அத்தெ வாசிக்க கத்துகிரத்துக்கு மூணு வர்ஷம் புடிச்சுது. ஒரு மியூஜிக் மாஸ்டர் (music master) வைச்சி, அவருக்கு மன்திலி செவன் ருபீஸ் (monthly seven Rupees) கொடுத்து வந்தேன். இப்பொ நண்ணு வாசிக்கரேன்.

[சபாபதி மறுபடியும் இரண்டு டம்ளர்களைக் கொண்டுவந்து குப்புசாமி முதலியாரிடம் ஒன்றையும் கிருஷ்ணசாமியிடம் ஒன்றையும் கொடுக்கிறான்.]

இருவரும் [குடித்துப் பார்த்து] து து!

கு. என்னு அப்பேன் இது? காப்பி ஆட்டம் இல்லையே!

கி. இதுவும் டீ (Tea) ஆட்டம் இல்லெ!

ச-மு. வாட் ஈஸ் தி மேட்டர்? (what is the matter ?) லெட் மி சி (let me see) [முகர்ந்து பார்த்து]

சபாபதி என்னடா செய்தே?

ச. ஆத்தி கொண்டாரச் சொன்னையே அப்பா! ரெண்டையும் ஊத்தி ஆத்தி கொண்டாந்தேன்.

ச-மு. டாம் தி ஆஸ்! (damn the ass) ஒண்ணுவா ஊத்தச் சொன்னென்? இப்பொ என்னு செய்ரது அத்தெ?

ச. அதுக்கென்னுப்பா, வடி கட்டனு சரியா போவுது.

ச-மு. டாமிட் (damn it) என் முன்னே நிக்காதே! எனக்கு கோபம் வரும்! போ வெளியே! பிக் பூல் (big fool)

[சபாபதி போகிறான்]

நெவர்மைன்ட் (never mind) அவ்வையார் சொன்னபடி வயிற்றுக்குச் சோறு இல்லாதபொழுது காதுக்குக் கொஞ்சம் கொடுக்கப்படும், என்றபடி கொஞ்சம் மியூஜிக் (music) கேட்போம்.

[கிராமபோனில் ஒரு பிளேட் (plate) போடுகிறான்.]

இது நான் பாடின ஸ்பெஷல் சாங் (special song) ரொம்ப ஸ்பிலென்டிட் (splendid) ஆயிருக்கும் ஹியர் பிளீஸ் (hear plese) [அதற்கு சாவி கொடுக்கிறான்] வாட்டீஸ் திஸ் (what is this?) சம்திங் ராங் (something wrong) அந்த டாம் பூல் (damn fool) என்னமோ கெடுத்துவைச்சிருக்கிறான்! சபாபதி—

சபாபதி வருகிறான்

ச. ஏம்பா!

ச-மு. இத்தெ யென்னமானு தொட்டையா நீ?

ச. நானு ஒண்ணும் செய்யலெ அப்பா! அல்லாம் தொடச்சி வைக்கச் சொன்னையே இண்ணு, அந்த தோசக்கல்லு மாதிரி யிருக்குதே, அது ரொம்ப அழுக்கா யிருக்குது இண்ணு, நண்ணு செங்கல் போட்டு பளபள இண்ணு தேச்சி வைச்சேன்.

ச-மு. பாத்தைங்களா! நெனேச்சேன் நானு! இந்த இடியட்டெ (idiot) கட்டிக்கொண்டு அழவேண்டியதா யிருக்குது! இன்னொரு பிளேட் (plate) போட்டுபார்க்கிறேன்,

[கொஞ்ச நேரம் பாடின பிறகு கமப, கமப, கமப என்று பாடிக்கொண்டிருக்கிறது.]

வாட் நான்சென்ஸ் இஸ் திஸ் அகேய்ன்! (what nonsense is this again) இங்கே வாடா இப்படி சபாபதி, நிஜத்தைச் சொல்லு, இத்தெ என்ன செய்தே?

ச, நான் ஒண்ணும் செய்யலெ அப்பா! நானு தொடைக்கவே யில்லெ அப்பா இதெ! இது பொய் பேசுதப்பா!

ச-மு. நான்சென்ஸ் (nonsense) நிஜத்தைச் சொல்! இல்லாப்போனா உடனே டிஸ்மிஸ் (dissmiss) பண்ணி விடுவேன்.

ச. இல்லெ அப்பா! நெஜத்தே சொல்லிடரேன், நேத்து நீ சொன்னையா ஊசியினாலெ கோடுபண்ணி யிருக்கிரத்தொட்டுதான் பாடுது இண்ணு, அத்தெ பாக்கணும் இண்ணு, ஒரு குண்டூசி எடுத்து கோடு கிழிச்சிகினெ வந்தெ! ஒரண்டெ பொத்தலா போச்சிப்பா கொஞ்சம், அவ்வளதாம்பா.

ச-மு. பொத்தலா பண்ணிவுட்டெ!

ச. இல்லெ அப்பா! அத்தெ ஒடனே கொஞ்சம், சாதம் போட்டு ஒட்டிவிடரெம்பா, நீ கோவிச்சிக்காதேப்பா!

ச-மு. டாம் டர்ட்டி பூல் (damn dirty fool) உன்னெ டிஸ்மிஸ் (dismiss) பண்ணிவிட்டேன்! போ வெளியே.

(சபாபதி போகிறான்)

இல்லேங்கோ! இதெல்லாம் ரொம்ப காஸ்ட்லி ஸ்லேட்சு (costy slides) ங்கொ, ஒவ்வொண்ணு, ஆப் பாஸ்டு திரீ கோர்டர் பாஸ்ட் பைவ் ருபீஸ் (half past three, quarter past five rupees) ஆகுதுங்க!

ஒரு கடிதத்துடன் சபாபதி மறுபடியும் வருகிருன்.

உன்னெ யார் மறுபடியும் வரச்சொன்னது?

ச. இல்லெ அப்பா, பக்கத்தெரு முருகேசம் ஊட்டுலே யிருந்து அவசரமான காகிதம் இண்ணு கொடுக்கச் சொன்னுங்க இந்த காயிதத்தெ!

ச.மு. அல்லோ! (hullo!) மைத்த கிலாட் (glad), ரிசல்டஸ் (result) எல்லாம் செனெட் அவுஸ் (senate house) லெ ஒட்டிவிட்டாங்களாம் அப்பேன், உன் ரிசல்ட்டு (result) போய் பார்த்துகினு வரக்கூடாது?

கி. உங்க ரிசல்ட்டு (result).என்ன?

ச.மு. அத்தெ எழுதலெ என் பிரன்ட் (friend) அத்தெ பத்தி ஏதாவது சந்தேகம் இருந்தாதானே?

கி. எதுக்கும் நீங்களும் வாங்களேன் கூட, போய் பார்க்க லாம்.

ச.மு. ஓ! வேஸ்ட் ஆப் டைம் (waste of time) அங்கெ என்ன சும்மா பஸ்ட் கிளாஸ் (first class) இண்ணு போட்டிருக்குமே தவிர, ராங்க் (rank) போட்டிருக் காது.

கி. அப்பா, உடனே புறப்பட்டு போய் பாத்து வரு வோம் வாங்க.

கு. ஆஹா புறப்படுவோம்.

ச.மு. தம்பி, எண்ணைக்கு பொங்கல் இண்ணு சொன்னே?

கு. ஆ! மறந்துபூட்டேன்! வர்ரப்போ இந்த பக்கம் வந்து இட்டும்போரெம்பேன்.

ச.மு ஓ.! அதுக்கென்ன?— சீக்கிரம் தம்பி ரிசல்டஸ் (result) பாத்துகினு வாங்கள்; ஓப் வில் பி குட் நியூஸ் (hope will be the good news)

(குப்புசாமி முதலியாரும், கிருஷ்ணசாமியும் போகிருர்கள்.)

ச. ஏம்பா, பரிட்செ ஆச்சாப்பா உனக்கு?

ச.மு. பரிட்செ யெல்லாம் - பஞல் ஆச்சு?

ச. அப்பா! சந்தோஷமாச்சப்பா! நானு இப்பவெ சொல்லிவுட்டேன், இந்த மாசம் மொதலு எனக்கு ஒரு ரூபா சம்பளம் ஒஸ்தணும்.

ச.மு. பரிட்செ பஞலா போச்சி இண்ணு! என்ன டாம் பூல் (damn fool) ஆ யிருக்கரே.

ச. பாசு பண்ணலெ? ஆச்சு இண்ணையே அப்பா! பெயிலா போச்சு?

ச.மு. புஸ்! ஆல் பேட் (all fate) அது போறுபோவுது, சபாபதி நான் ஒண்ணு சொல்லப்பொரேன் இப்பொ, அதும்படி செய்தையா, உனக்கு சம்பளம் ஒஸ்தரேன்.

ச. சொல்லப்பா,

ச.மு. நான் சொல்ர்வரைக்கும் பெயிலா (fail) போன சமாசாரம் ஒருத்தருக்கும் சொல்லாதே!

ச. இல்லவே யில்லேப்பா.

ச.மு. முன்னெ போயி பத்துபலம், பாதுமல்வாவும், பத்து பலம் பகோடாவும், வாங்கிகினு வா, சீக்கிரம்—இந்தா அரெ ரூபா.

ச. என்னுத்துக்கப்பா இப்பொ?

ச.மு. அதெல்லாம் கேக்காதே, போ முன்னே.

ச. இல்லெ, நம்பவூட்லேயே பலகாரம் பண்ணி யிருக்கிருங்களெ, அத்தெ சாப்பிடக்கூடாதா இண்ணு கேட்டேன்.

ச.மு. அதெல்லாம் ஒதவாது; சீக்கிரம் வாங்கிகினு, ஒருத்தருக்கும் தெரியாமெ மறைச்சிகொண்டா இங்கே.

ச. ஒரு வேளெ தெரிஞ்சிபோனு?

ச.மு. உன்னெ டிஸ்மிஸ் (dismiss) பண்ணி விடுவேன்!— போ சீக்கிரம்.

ச. உம்—எந்த கடையிலே வாங்கி வர்ரது?

ச-மு. எந்த கடையாவது கிட்ட இருக்கர கடையிலே--போ சீக்கிரம்.

ச. எது மின்னெ வாங்கரது ?

ச-மு. ரெண்டையும் ஒண்ணு வாங்கிகினு வா—போ !

ச. என்னப்பா அவசரப்படரே! அங்கே போனப்புறம் மறந்துபூட்டா என்ன செய்ரது? அதுக்குதான் இப்பவே எல்லாம் கேட்டுகினு போரேன். உம்...என்னென்னு வாங்கிவரச் சொன்னே ?

ச-மு. டாம் பூல் (damn fool!) இத்தனி நாழி சொன்னதென்ன ? கால் ரூபாய்க்கு பகோடாவும் கால் ரூபாய்க்கு பாதுமல்வாவும் ; அரை நொடியிலே ஓடியாரணும்!

ச. இதோ வந்துட்டேன். [வேகமாய்ப் போகிருன்.]

ச-மு. எப்படியும் பெயில் (fail) ஆயிப்போன சமாசாரம் தெரிஞ்சி பூடும் ; இதுதான் சரியான யுக்தி ! இல்லாப் போனு இன்னொரு வர்ஷம் படிடா இண்ணுவாங்க :

சபாபதி மறுபடி வருகிருன்

எங்கே மிட்டாயி ?

ச. இரப்பா கொஞ்சம்!—மூச்சு வாங்குது !—ஓடி வந்தேன்.—

ச-மு. மிட்டாய் எங்கேடா ?

ச. அங்கே போயி நெனேச்சிகினேன்!—ஒண்ணு சொல்ல மறந்து பூட்டையே, எந்த கால் ரூபாய்க்கி பாதுமல்வா ? எந்த கால் ரூபாய்க்கி பகோடா ?

ச-மு. வாட் இடியட் ! (what idiot) எதுக்கானு என்னு ? நான் அவசரம் இண்ணுசொன்னு, கொஞ்சமாவது தெரியலெ ! எதுக்காவது வாங்கிவா போ.

[சபாபதி போகிருன்.]

நல்ல கயறு பாக்கணும்-இங்கே மாட்டிகினு தொங்கனு தான், வெளியிலேயிருந்து பாத்தாநண்ணு தெரியும்—, இந்த நாக்காலி யெல்லாம் எடுத்தூடணும்.

[அப்படியே செய்கிறர்.]

சபாபதி இரண்டு பொட்டலங்களை எடுத்துக்கொண்டு
மறுபடி வருகிறன்.

ச. இந்தா அப்பா !

ச-மு. ஆல் ரைட் (all right), கொடு இப்படி. சபாபதி, இந்த கயத்தெ நண்ணு கட்டு சீக்கிரம் அந்த திராவியிலே, க்விக் (quick). [உள்ளே போகிறர்.]

ச. [கயிற்றைக் கட்டிக்கொண்டே] நானு அவ்வளவு வேகமா ஓடிப்போயி முட்டாயி வாங்கியாந்தேன், எனக்கு கொஞ்சம்கூட கொடுக்காதையா திண்ணூடரெ, ஆவட்டும் ! ஆவட்டும் !

திரிபுரம்மாள் வருகிறள்.

தி. சபாபதி, கொழந்தெ எங்கேடா ?

ச. இங்கெ இல்லெ அம்மா ! அந்த அறையிலெ இருக்கருரோ என்னமோ தெரியாதம்மா எனக்கு !

தி. கொழந்தெ பரீட்சே பாசு கொடுத்துதா தெரியுமா உனக்கு ?

ச. பாசு கொடுத்தது எனக்கு தெரியாதம்மா ! [ஒரு புறமாக] பாசும் கொடுக்கலெ பகோடாவும் கொடுக்கலே !

தி. என்னுடா, சபாபதி, உங் கிட்ட ஒண்ணும் சொல்லலெயா ?

ச. நான் பெயிலா போனேன் இண்ணு யார்கிட்டவும் சொல்லாதே இண்ணுரு ! அத்தொட்டு நானு சொல்ல மாட்டேன், அது நீங்களா வேணுமிண்ணு கேட்டுகுங்கோ !

தி. ஐஐயோ ! அவென் பாசு பண்ணுபோனு நானு பொழச்சிருக்கமாட்டெணிண்ணுனே !

[ஒருபுறமாய்ப் போகிருள்.]

சபாபதிமுதலியார் மிட்டாய் பொட்டலங்களை
எடுத்துக்கொண்டு வருகிறார்.

ச.மு. பூட்டாங்களா அம்மா ?—அந்த கவுத்தெ கொடு இப்படி-சபாபாதி, உனக்கு சம்பளம் ரெண்டு ரூபாய் ஒஸ்தரேன், இப்ப மாத்திரம் நான் சொன்னபடி செய்யணும் தெரியுமா ?

ச. ஆவட்டும்பா.

ச.மு. கதவண்டெ பாத்துகினே இரு, மாமா வண்டி திரும்பி வந்தவுடனே, எனக்கு சைகெ காட்டு. நானு தூக்கு போட்டுகிறமாதிரி இருக்கரேன்; நீ ஓடிப்போயி அவங்ககிட்ட, சின்ன ஐயா தூக்கு போட்டுகுது ஓடி வாங்க! ஓடிவாங்க! இண்ணு சொல்லு, தெரியுமா? அப்புறம் நானு பாத்துகிறேன் ஆக வேண்டியதே.

ச. உம் உம் !

ச.மு. என்னமாறு தப்பு பண்ணப்போரே பத்தரம்! என்னுண்ணு சொல்ரே, சொல்லு பாக்கலாம்.

ச. ஐயா ! ஐயா ! நம்ப சின்ன ஐயா தூக்கு போட்டுக்கப் போருராம்! வேடிக்கெ பாக்க ஓடிவாங்க! இண்ணு சொல்ரேன்.

ச.மு. சத் ! பூல் (fool) அப்படியா சொல்லச் சொன்னேன் ? தூக்கு போட்டுகினு செத்து பூடராரு! ஓடி வந்து தடுங்க! இண்ணு சொல்லு. போயிரு வெளியே, சீக்கிரம் வருவாங்க.

(சபாபதிபோகிறன்.)

வரவேண்டிய டைம் (time) ஆச்சி, நம்பெ தயாராயிருக்கணும்.

சபாபதி மறுபடி வருகிறன்,

வந்துட்டாங்களா ?

ச. இன்னும் வல்லெ அப்பா.

ச.மு. வல்லையா ?—பின்னெ நீ யேன் வந்தே ?

ச. அத்தெ சொல்லிட்டு போலாம் இண்ணு வந்தேன்.

ச.மு. மடையா !—போ வெளியே !—போயிரு சீக்கிரம் !

ச. இல்லெ அப்பா, தொள தொளாட்டிக்கித்தானே தூக்கு போட்டுகப்போரெ நீ ?

ச.மு. அது ஏன் உனக்கு ?

ச. இல்லே அப்பா, நீ நெஜம்மா தூக்கு போட்டுகிறெ, கனிஷ்டபருங்க வந்து என்னெ புடிச்சிம் போமாட்டாங்களா ?

ச.மு. அதெல்லாம் ஒண்ணும் செய்யமாட்டாங்க, போ !

(சபாபதி போகிருன்.)

அதோ வண்டி வர்ராப்போலெ இருக்குது !

சபாபதி மறுபடி வருகிருன்.

ச. அதோ வருதப்பா வண்டி ! வண்டி !

(சபாபதி முதலியார் கழுத்தில் கயிற்றை மாட்டிக்கொண்டு தூக்குப் போட்டுக்கொள்வதுபோல் பாசாங்கு செய்கிருர்; சபாபதி, "அப்பா, தூக்குபோட்டுகுது ! ஓடிவாங்க ஓடி வாங்க !" என்று கூவிக்கொண்டே வெளியில் போகிருன்.)

திரிபுரம்மாள் ஓடி வருகிருள்.

தி. மகனே ! மகனே ! வேண்டாண்டா வேண்டாண்டா !

(கையைப் பிடித்துத் தடுக்கிருள்.)

ச.மு. (திமிறிக் கொள்வது போல் பாசாங்கு செய்து) அதெல்லாம் முடியாது ! அதெல்லாம் முடியாது ! பரீட்செ பெயில் (fail) ஆன பிற்பாடு நானு பொழச்சிருக்கமாட்டே பொழச்சிருக்கமாட்டே ; நான் செத்து பூடரேன் ! செத்துபூடரேன் !

ச. அப்பப்பா ! அந்த பாதுமல்வா எங்கே வைச்சிருக்கெ அத்தெ சொல்லிட்டு செத்துபூடப்பா ! அத்தெ முன்னெ சொல்லிவுடப்பா !

ச.மு. அதெல்லாம் முடியாது ! நான் உயிரோடெ இருக்கமாட்டேன்—இருக்கமாட்டேன் !

தி. வேணுண்டா கண்ணு! வேணுண்டா கண்ணு!—

[கயிற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு]

இந்தப் பாழாப்போன பரிட்செ எக்கேடாவது கெடட்டும்!—நீ பொழைச்சி யிருந்தா போதும்!

ச-மு. அம்மா, நீங்க ஏம்மா என்னெ தண்டத்துக்கு தடுக்கறைங்க?—இந்த வர்ஷம் இல்லாப்போனு வர்ர வர்ஷம் செத்துபூடப்போரேன்.—

தி. அது ஏன் அப்படி?

ச-மு. வர்ர வர்ஷம் மறுபடியும் நாயினு என்னெ பரீட்சைக்கு போகச் சொல்லமாட்டாங்களா?

தி. வேண்டவே வேண்டாம்! நான் உங்க நயினுகிட்ட சொல்லி, இனிமேலே இந்த எழவெடுத்த பரீட்சைக்கே அனுப்பத்தேவலெ, இண்ணு சொல்ரேன், பயப்படாதே!

ச-மு. அந்த மாதிரி கை போட்டு கொடுங்க.

தி. [அவன் கையை அடித்து] அப்படியே ஆவட்டும். நீ ஒண்ணும் பயப்படாதே!—நீ சாப்பிடவா பலஹாரம்— இந்த மூஞ்செ வைச்சிகினு, மாமியார் ஊட்டுக்கு போவாங்க பொங்கல் விருந்துக்கு

ச-மு. இல்லெ அம்மா, எனக்கு பசிக்கலெ இப்போ.

தி. அப்பொ, மூஞ்செல்லாம் கழுவிகினு, தலெ வாரிகோ; அடெ சபாபதி, அப்பா கூடவே இரு.—நீதான் உத்தரவாதம். கயிறு கியிறு தொட்டுதா பாரு!

ச. இனிமேலே தொடாதம்மா, நான் பாத்துகரேன்.

[திரிபுரம்மாள் போகிறார்கள்]

ச-மு. கதவெ சாத்துடா, உள்ளே தாப்பாள் போடு.

[சபாபதி அப்படியே செய்கிறான்]

ச. [மெல்ல] எங்கேப்பா, அல்வாவும் பகோடாவும்?

ச-மு. [அறையிலிருந்து அவைகளை எடுத்து] இதோ!

[இருவருமாக விரைவாகப் புசிக்கிறார்கள்]

காட்சி முடிகிறது.

மூன்றாங் காட்சி

இடம்—மாணிக்க முதலியார் வீட்டின் மெத்தை
சபாபதி முதலியார் உட்கார்ந்திருக்கிறார்
முருகேசமும் குமரகுருவும் வருகிறார்கள்.

மு-கு. லெட் மி கன்கிராட்யுலேட் யு! லெட் மி கன்கிராட்யு லேட் யு! (let me congratulate you)

ச-மு. ஓ எஸ்! ஓ எஸ்! (Oh yes!) ஆனாலும் இதுலே கொஞ் சம் வருத்தம் இருக்குது பிரதர்ஸ் (brothers; நான் பஸ்டு கிளாஸ்லெ (first class) பஸ்டு பாய் இன் தி பிரசிடென்சி (first boy in the presidency) ஆக பாஸ் (pass) பண்ணுவேன் இண்ணு நினைச்சேன், கொஞ்சம் தப்பிப் பூட்டுது. அந்த (Ray) இங்கிலீஷ் பேப்பர்லெ (English paper) டு மார்க்ஸ் (two marks) குறைச்சிப் போட்டான் இண்ணு நெனைக்கிறேன்.

மு. பஸ்டு கிளாஸ்லெ (first class) பாஸ் (pass) பண்ணையோ இல்லையோ ?

ச-மு. இல்லெ, செகிண்ட் கிளாஸ்லெ (second class) தான் போட்டான். பாஸ் (pass) பண்ணு, பஸ்டு கிளாஸ்லெ (first class) பஸ்டு பாய் இன் தி பிரசிடென்சி (first boy in the presidency) ஆக பாஸ் (pass) பண்ணனும், இல்லாப்போனா எந்த கிளாஸ்லெ (class) பாஸ் பண்ணு என்ன ?

கு. பாதர் இன் லாவுக்கு (Father-in-law) டெலிகிராம் (telegram) அனுப்பிச்சூட்டைங்களா ?

ச.மு. பை ஜோவ் !(by jove) அதெ மறந்தேன்—சபாபதி சபாபதி !—

சபாபதி மெல்ல வருகிறான்

ச.மு. என்னா நான் கூப்பிட்டதுக்கு ஏன் இண்ணு சொல் லாதே வர்ரெ ?

ச. என்னப்பா ! பாஸ்கூட குடுத்துவுட்டே, இப்பகூட சபாபதி இண்ணு கூப்பிடரையே என்னெ ?

ச-மு. பின்னெ என்னண்ணு கூப்பிட ?

ச. சபாபதி முதலி இண்ணு கூப்பிடக்கூடாதா ?

ச.மு. சத்! நான்சென்ஸ்! (nonsense) அதெல்லாம் உதவாது —இந்தா, இதோ டெலிகிரும் (telegram) எழுதி தர்ரேன், அத்தெ நேரா தபால் ஆபீஸ்லெ கொண்டு போய் போடணும் தெரியுமா?

ச. அப்படியே ஆவட்டுமப்பா.

ச.மு. (எழுதிக்கொண்டே) கன்கிருட்யுலேட், பாஸ், பஸ்ட் சென்ட், வைப், பாசிடிவ்லி (congratulate, pass, first, send, wife, positively) இன்னும் டு வொர்ட்ஸ் (two words) இருக்குது.

மு. பஸ்ட் (first) இண்ணு ஏன் எழுதனே? செகெண்ட் கிளாஸ்லெ (second class) பாஸ் (pass) பண்ணதாக சொன்னேயே?

ச.மு. இதுலே, பஸ்ட் (first) இண்ணு பஸ்டு கிளாஸ் (first class) இண்ணு அர்த்தம் அல்லா, பஸ்ட் டேட்லெ (first date) ரிசல்ட்ஸ் (results) வந்துது இண்ணு அர்த்தம்—இன்னம் டு வொர்ட்ஸ் (two words) இருக்குது டெலிகிரும்லெ (telegram) பாக்கி, — ஆ! தட் இஸ் ரைட், எக்ஜாமினர்ஸ் குட்! (ah that is right, examiners good!) சரியா போச்சி!—எடுத்தும் போடா சீக்கிரம். [சபாபதி போகிருன்]

கு. எந்த காலேஜிக்குப் (college) போப்போரெ அப்பேன்?

ச-மு. அதாம் பெரிய கஷ்டமாயிருக்குது! டாக்டா மில்லர் (Dr. miller) என் காலேஜ் (college) வந்து சேரணும் இண்ணு அர்ஜென்ட் டெலிகிரும் கொடைகனல்லெ (urgent telegram Kodaikanal) யிருந்து அனுப்பிருக்கிருன்; டாக்டர் போர்ன் (Dr. Bourne) பிரசிடென்சி காலேஜ் ஒன்லி குட் காலேஜ், கம் ஜாயின் (Presidency Collge only good college, come join) இண்ணு எழுதியிருக்கிருன். பச்சையப்பாஸ் காலேஜ்லே (Pachayappah's College) எங்க பாதர் டிரஸ்ட்டி (father trustee) ஆக இருந்தாரே இண்ணு யோசிக்க வேண்டியதாயிருக்குது. அதுவு மில்லாதெ யாரும் கிளவர் பிரிலியண்ட் பாய்ஸ் (clever brilliant boys) இல்லெ இண்ணு பிரின்சிபால் கம்ளெயின் (Principal complain) பண்ணிகிணு இருந்தாரு—இதுலே பெரியசங்கடமா யிருக்குது!

மு. என்ன சப்ஜெக்ட் (subject) எடுத்துக்கப்போரெ?

ச-மு. எடுத்துக்கன, கெமிஸ்டு (chemist) ஆவது பிசிக் (physic) ஆவதுதான் எடுத்துகணும்; நீ என்ன அட்வைஸ் (advise) பண்ணரே?

கு. நீ பிசிக் (physic) எடுத்துக்கனதான் ஈசி (easy)

மு. ஐ அட்வைஸ் கெமிஸ்ட் (I advise, chemist) கெமிஸ்ட் எடுத்துக்கப்பேன் சுலபம்.

ச-மு. நான், எங்க மதர் (mother) ஏ கன்சல்ட் (consult) பண்ணிப்பார்த்தென், அவுங்க, படிச்சது போதும் தம்பி அதிகமா படிச்சா ஒடம்பு கெட்டுப் போவுது இண்ணு சொல்ராங்க, அத்தொட்டு ஸ்டடி ஸ்டாப் (study stop) பண்ணிவிடலா மிண்ணு பாக்கரேன், நீங்க் என்ன சொல்ரைங்க பிரதர்ஸ்? (brothers)

கு. அப்படியே செய்யலாம் அப்பேன்.

மு. அப்போ சும்மாவா இருப்ப வூட்லே?

ச-மு. ஓ நோ (Oh no!) அது செய்ய மாட்டேன். எடுக்கேஷன் (Education) ஓட எப்பவும் டச்லே (touch) இருக்கணும். பச்சையப்பாஸ் காலேஜ் டிரஸ்டி (Pachayappah's College Trustee) ஆவது; இல்லாப்போன யூனிவர்சிடி பெல்லோ (Uniuersity fellow) ஆவது ஆவ டிரை (try) பண்ணலாமிண்ணு இருக்கரேன்.

மு. பச்சைப்பாஸ் டிரஸ்டிக்குத் (Pachayappah's trustee,) தான் டிரை (try) பண்ணு அப்பேன், கஷ்டமில்லெ, அதுலெ பேச வேண்டியதில்லே, மீட்டிங் (meeting) கூடம் அட்டென்ட் (attend) பண்ணவெண்டியதில்லெ.

சின்னசாமி முதலியார் வருகிறார்.

சி. அப்பேன், சபாபதி, பரீட்செ பாஸ் (Pass) ஆச்சாமே! ரொம்ப சந்தோஷம்.

ச-மு. வாங்க! வாங்க! வாத்தியார்! வாட் ந்யூஸ் (what news?) என்ன சமாசாரம்?

சி. ஒன்றுமில்லே மேல் பரீட்சைக்கு தமிழ் பாடம் படிக்க வேணுமே இண்ணு.—

ச.மு. ஓ! அதெல்லாம் கிடையாதே! சமாசாரம் தெரியாதோ? இப்போ யூனிவர்சிடியிலே பைபில்கேஷன் இன்ட்ரொட்யூஸ் (University biblecation introduce) பண்ணிவிட்டாங்களே? பி. ஏ. (B. A) கிளாஸ்லெ (class) போனதும் தமிழே பேசக்கூடாது; மெட்ரிகுலேஷன் பாஸ் (matriculation pass) பண்ணதும், அல்லாம் இங்லீஷே (english) பேசணும்; தமிழெல்லாம் மறந்து பூடணும்.

சி. சரிதான் அப்பேன்—ஆனாலும் நீ பாஸ் பண்ணத்துக்காக ஒரு சாத்துக்கவி பண்ணேன், அதெ படிக்கரேன் கேக்கரையா?

ச-மு. ஓ! சாத்துக்கவியா? ரொம்ப சந்தோஷம்—ஆனா அதெ, கொஞ்சம் பொறுத்து, என் சிநேகிதருங்கல்லாம் வருவாங்க, ஒரு ஈவினிங் பார்ட்டி (evening party) வைச்சிருக்கரேன், அப்பொ அவுங்க எதிருக்க படியுங்க—வைச்சூட்டுப் போங்க இப்படி.

[அவர் ஒரு காகிதத் துண்டை மேஜைமீது வைக்கிறார்]

கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் வாங்க.

சி. அப்படியே தம்பி. [போகிறார்.]

சபாபதி வாடிய முகத்துடன் வருகிறான்

ச. என்னப்பா அது! சும்மா பாஸ் (pass) பண்ணூட்டேன் பாஸ் (pass) பண்ணூட்டேன் இண்ணு மாத்ரம் சொல்ரே! உனக்கு இன்னும் கொஞ்சமாவது புத்தியில்லெ அப்பா!

ச-மு. என்னடா அது! டாம் புரூட்! (damn brute!).

ச. இங்கே எல்லாம் போடாதே, தபால் ஆபீசுலெ போடு இண்ணு சொன்னையா.—நானு அப்பவே நெனெச்சேன் தப்பு இண்ணு, ஆனாலும் நீ சொல்ரத்துக்கு எதிர்த்துப் பேசக்கூடாது இண்ணு பேசாதே போனனு — போனதுக்கு நல்ல தொடப்பக்கட்டெ அடி ஆப்டுது!

ச-மு. ஏன்?

ச. ஏனு? தபாலாபீசிலெ, எல்லாரும் உக்காந்துகினு இருக்கர எடத்துலெ நடுப்புர போட்டேன்; போட்டுட்டு இத்தெ யாரானு எடுத்துகினு போராங்களா இண்ணு மொள்ளமா ஒளிஞ்சிகினு பாத்துகினு இருந்தேன்? கொஞ்சம் பொறுத்து அங்கே பெருக்கரவ வந்து, அத்தெ பெருக்கிம்போயி குப்பையிலே கொட்ட போனு!—உடனே எனக்கு கோபம்வந்து, அவகிட்ட போயி, அப்படியே புடிச்சிகினேன்! அப்புறம் ரெண்டு பேரும் சண்டெ போட்டோம்.

ச.மு. அப்புறம் ?

ச. அப்பறம்—எனக்கு தொடப்பக்கட்டெ அடிதான் !

ச.மு. அந்த காகிதம் என்னமாச்சு ?

ச. ஆ! அத்தெ மாத்திரம் உடலே அப்பா! அந்த குப்பெ தொட்டியிலே தேடி பார்த்தேன், என் கண்ணுக்கு ஆப்பிடலெ, சரிதான் இருக்கட்டும் இண்ணு, அங்கே யிருந்த குப்பை யெல்லாம் ஒண்ணுகூடம் உடாதெ, தபால் பெட்டியிலே வாரி போட்டுட்டு வந்தூட்டேன் !

ச.மு. டெலிகிருமெ (Telegram) தபால் பெட்டியிலெ ஏண்டா போட்டே? அதுக்கு ரூபா வாங்கிகினு போகலெ அம்மா கிட்ட ?

ச. உம்! சொன்னையா அப்பா அது எனக்கு? என்னு முட்டாளாயிருக்கரெ அப்பா? என்னப்பாது, இதுதானு நீ பாஸ் (pass) பண்ணது? எனக்கென்னமோ சந்தேகமா இருக்குதுப்பா !

ச.மு. போ அதனப்பிரசங்கி! ரெகுலர் இடியட்! (regular idiot) வாய் மாத்திரம் இருக்குது !

[சபாபதி கீழே இறங்கிப் போகும்பொழுது வழியில் சுந்தரமூர்த்திப் பிள்ளையைச் சந்திக்கிறுன்.]

சு. யாரப்பா அது? இது சபாபதி முதலியார் வீடுதானு ?

ச. ஆமாம்.

சு. அவர்தானே சபாபதி முதலியார் ?

ச. ஆமாம்.

சு. பி. ஏ. (B. A.) பாஸ் (pass) பண்ணி இருக்கிறாரல்லா இவரு ?

ச. அது மாத்திரமா? அல்லாபாசும் பண்ணி இருக்கிறாரு.

ச.மு. வாங்க! வாங்க! சார் (sir)

சு. ஓ யூ (you) வா! ஹூவோ (who) வாட் ஓ! (what) ஐ தாட்டு (I thought) யூ, (you) வா! [உட்கார்ந்து] நான் லிஸ்டெ (list) பார்த்தெ அப்பேன், அதிலெ சபாபதி முதலியார், பி. ஏ. (Sabapathy Mudaliar, B.A.) இண்ணு போட்டிருந்துதா, யாரோ இண்ணு பாத்தேன்! நீதானே ? ரொம்ப சந்தோஷம் உன் வோட் (vote) நான் ஆஸ்க் (ask) பண்ணவே வேண்டியதில்லையே—

ச.மு. என்ன ஓட்டு ?

சு. இந்த முனிசிபல் பாலிடிலே (Municipal polity) நானும் ஒரு கமிஷன் (commission) ஆகலாமிண்ணு டிரை (try) பண்ரேன்.

ச,மு. இப்பொ முனிசிபாலிடி (Municipality) எல்லாம் பேர் மாத்திட்டாங்களே தெரியுமா ?

சு. ஆமாமாம், இப்பொ, முனிசிபல் கோ - ஆபரேஷன் (Municipal co-operation) இண்ணு பேர் மாத்திட்டாங்க தெரியும். அப்பேன், உன் ஓட்டெ எனக்குக் கொடுக்கணும்; அதாம் கேக்க வந்தேன்.

ச.மு. எத்தனி ஓடு இருக்குது எனக்கு ?

சு. ஒண்ணுதாம்போலெ இருக்குது.

ச.மு. நான் ஒண்ணு யோசன பண்ரேனுங்க. இப்பொ நான் பாஸ் (pass) பண்ணப் பிறகு ரெஸ்பான்சிபல் (responsible) அதிகமா போச்சுங்க! படிச்சவங்களுக்குத் தான் நான் ஓட் பண்லாமிண்ணு இருக்கிறேன். நீங்க அவ்வளவா படிக்கலெபோலெ யிருக்குதே—

சு. இல்லெ அப்பேன் தமிழ் நண்ணு படிப்பேன். இங்கிலீஷ் ஒக்காபிலரி (Egltsh vocabulary) வரைக்கும் எல்லாம் படிச்சிருக்கிறேன்.

ச.மு. கமிஷனர் (commissioner) ஆகணும் இண்ரைங்களே, கமிஷன் இண்ணு என்ன தெரியுமா உங்களுக்கு?

சு. கமிஷன் (commission) இண்ணு தரகு இண்ணு சொல்ராங்களே, அதுதானே?

ச-மு. சரி, அந்த கமிஷன் commission) வாங்கத் தெரியுமா உங்களுக்கு? அதுக்கெல்லாம் மர்ச்சென்ட்ஸ் (merchants) ஆயிருந்தால் சரி, லாண்ட் லார்ட், (land lord) வீட்டு வரி வாங்கி சாப்பிடுகிற உங்களுக்கு என்ன தெரியும்?

சு. அதெல்லாம் கத்துகுவேம்பேன். நீ மத்திரம் உன் வோட் (vote)—

ச.மு. அதெல்லாதே, ரோட் (road) எல்லாம் கிளீன் (clean) பண்ணணும், சாக்கடை யெல்லாம் வாரணும், இதெல்லாம் உங்களாலே முடியாது; இதெல்லாம் முன்னே கத்துகினு வாங்க, அப்புறம் ஐ கிவ் ஓட், யூ மேக் அட்டெம்ட் (I give vote, you make attempt.)

சு. வாட் ஐ மேக்கு (What I make) அப்பேன்! ஆல் யுவர் மேக்கே மேக்! (all, your make) நீங்கள்ளாம் மனசு வைச்சா தானே!—இப்போ கொஞ்சம் வேலெயாயிருக்கராப்போலெ இருக்குது; நானு இன்னொரு வேளெ வர்ரேன் அப்பேன்.

ச.மு. வாங்க. [சுந்தரமூர்த்தி முதலியார் போகிறார்]

சபாபதி இரண்டு மூன்று தபால் காகிதங்களைக் கொண்டு வருகிறான்

ச. தபால் வந்தது அப்பா.

ச.மு. [மேல் விலாசங்களைப் பார்த்து] நான்சென்ஸ்! (nonsense! இத்தை யெல்லாம் யார் உன்னெ வாங்கச் சொன்னது? இந்த அட்ரெஸ் (addrss) எல்லாம் தப்பு? நேத்தே நான் சொன்னேனே! எனக்கு இனிமேலெ காயிதம் வந்தா எம். ஆர். ஆர். வொய், சபாபதி முதலியார், எஸ்கொயர், ரூட் எம். பி. (M. R. Ry. Sabapathy Mudaliar, Esquire, root M. P.) இண்ணு இருந்தா தான் வாங்கணும், இல்லாட்போனு அட்ரெஸ் (address) தப்பு இண்ணு வாபஸ் பண்ணணும்; இனிமேலெ கியாபகம் வைச்சிக்கோ போ, பத்திரம். [சபாபதி போகிறான்]

கு. எம். பி. (M. P.) இண்ணு என்னு பிரதர் (brother)?

ச.மு. இதுகூடவா தெரியாது? அதுக்குத்தான் எதுக்கும் பாஸ் (Pass) பண்ணி யிருக்கணும் இண்ரது! எம். பி. (M.P) இண்ணு மெட்ரிக் பாஸ் (Matric Pass) இண்ணு அர்த்தம். நான் அனுப்பின இன்விடேஷன் (invitation) லே கூடம் சபாபதி முதலியார் எஸ்கொயர் எம்.பி. (Sabapathy Mudaliar, Esquire, M.P.) இண்ணு போட்டிருந்தேனே பாக்கலே?

மூன்று பாடகர்கள் வருகிருர்கள்

மூவரும். நமஸ்காரம்.

ச.மு. ஓ! ஆல் ரைட்! (Oh all right) வந்தைங்களா! சந்தோஷம். நீங்க உங்க வாத்யங்களெ யெல்லாம் அப்படி வைச்சூட்டு கீழேபோயிருங்க, நான் கூப்பிட ரப்போ வாங்க — அப்புறம் கூப்பிட்ரேன். இன்னம் கொஞ்சம் நேரம் பிடிக்கும் கச்சேரி ஆரம்பிக்க.

[பாடகர்கள் வாத்தியக் கருவிகளை மூலையில் வைத்துவிட்டுப் போகிருர்கள்.]

நான் வந்து ஆன்ட் நாச் பிரதர். (ant-nautch brother) நாழியாச்சி, நாம்போ போய் டிரெஸ் எக்சேன்ஜ் (dress exchange) பண்ணிகினு வரலாமா? நீங்களும் போயி சீக்கிரம் டிரெஸ் எக்சேன்ஜ் (dress exchange) பண்ணிகினு வாங்க.

[குமரகுருவும் முருகேசமும் போகிருர்கள்.]

சபாபதி வருகிருன்

ச.மு. சபாபதி! நீ இங்கே எல்லாம் தொடச்சிவை. பாய் எல்லாம் போட்டுவை. சாமான்களெ என்னமா உடைக்கப் போரெ பத்திரம்! [போகிருன்]

[உள்ளிருந்து] அடே சபாபதி, கடெ சாமானுக்கு லீஷ்டு (list) எழுதணும் ஒரு துண்டு காகிதம் கொண்டா.

ச. துண்டு காயிதமா?— இங்கே எங்கே இருக்குது? [தேடிப் பார்த்து] இதோ ஒண்ணு கெடக்குது.

[சின்னசாமி முதலியார் வைத்துவிட்டுப்போன சாற்றுக்கவி காகிதத்தை எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருகிருன்.]

ஆ! பாத்தையா திருடன்! [மூலையிலிருக்கும் குழலை எடுத்து] நேத்தும்புடிச்சு அம்மா காணம் இண்ணு கோவிச்சிகினு இருந்தாங்களே, இந்த அடுப்பு ஊதாங்குழாயெ

எவனோ திருடிகினு வந்து இங்கே ஒளிச்சி வைச்சிருக்கிறான்; ஆவட்டும் ஆவட்டும்! மின்னெ இத்தெ அம்மாகிட்ட கொடுத்தூடரேன்.

[உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டுவந்து]

வைச்ச திருடன் யாரிண்ணு பாக்கணும்.

[சாமானகளை யெல்லாம் தூடைத்துக்கொண்டு வரும்பொழுது ஒரு நாற்காலியைக் கீழே தள்ளி உடைத்துவிடுகிறான்]

ஐ ஐயொ! அப்பா வந்தா கோவிச்சிக்கும்—இதுக்கு ஒரு யுக்தி பண்ணணும்.

[அந்த உடைந்த நாற்காலியை அப்படியெ சரியாக இருப்பதுபோல் நிறுத்தி வைக்கிறான்.]

சபாபதி முதலியார் வருகிறார்.

ச.மு சரி. [உடைந்த நாற்காலியின் மீது உட்கார அது கீழே விழுகிறது]

ச. என்னப்பா! அந்த நாற்காலியை உடைச்சூட்டையே! அம்மா பாத்தா கோவிச்சிக்கி வாங்களே.

ச.மு. நெவர்மைன்ட்! (never mind) இத்தெ எடுத்து பக்கத்து ரூம்லெ போட்டுடு — அம்மாகிட்ட ஒண்ணும் சொல்லாதே தெரியுமா? சரி—நீ போய் சீக்கிரம் அந்த ஐஸ் கிரீம் (ice cream) தயார் பண்ணு, தெரியுமா? ஜாக்கிரதெ, ஐசையும் (ice) உப்பையும் ஒண்ணா போட்டு, பாலெ வேறே உடணும், அப்புறம் சும்மா சுத்தணும், தெரியுமா?

ச. தெரியும் தெரியும்பா.

ச.மு. தெரியும் இண்ணு சொல்லிவுட்டு நீ என்னமானா கெடுத்துவைப்பே. — அந்த மூலையிலே உக்காந்துகினு என் எதிர்க்கவே பிரிபேர் (prepare) பண்ணு.

ச. அப்படியே ஆவட்டும்பா.

[ஓர் மூலையில் உட்கார்ந்துகொண்டு, உப்பையும், ஐசையும் ஐஸ்கிரீம் மெஷினின் (ice cream machine) நடுவிலுள்ள துத்தநாக டப்பாவில் போட்டு, அதற்கு வெளியில் பாலை வார்த்து சுற்றுகிறான்.]

முருகேசம், ரங்கநாதம், நரசிம்மாசாரி முதலிய சிநேகிதர்கள் வருகிறார்கள்.

ச.மு. வாங்க! வாங்க! பிரதர்ஸ்! (brothers)

[எல்லோரையும் கைலாகு கொடுத்து நல்வரவேற்கிறார்]

ந. என்னு பிரதர், (brother) எக்சாமினேஷன் ரிசல்ட்ஸ் (examination results) இன்னும் பப்ளிஷ் (publish) பண்ணலேயே, உங்களுக்கு மாத்திரம் என்னமா தெரிஞ்சுது?

ச.மு. என் பிரதர்-இன்-லா (brother-in-law) பிரைவேட்டா (private) இன்குவைர் (enquire) பண்ணி எழுதறுன் எனக்கு.

உக்காருங்க பிரதர்ஸ். (brothers)

[எல்லோரும் உட்காருகிருர்கள்]

பஸ்டு ஐடம் இன் தி புரோக்ராம் (first item in the programme) ரிப்ரெஷ்மென்ட்ஸ்! (refreshments) ஐஸ் கிரீம்! (ice-cream)

மு. வெரி குட், பிரதர் (very good brother).

ச.மு. ஏண்டா சபாபதி, தயாராச்சா?

ச. இல்லேப்பா! — பால் கட்டவே யில்லேப்பா, பாலெல் லாம் வெளியிலே சிந்திப்போவுதப்பா!

ச.மு. வாட் நான்சென்ஸ்! (what nonsense) பால் என்ன மாடா சிந்திப்போவும்? ஓட்டையா யிருக்குதா என்ன?

[அருகில் போய்ப் பார்க்கிருர்]

என்னடா அது பாலெ வெளியிலெ ஊத்தனேயே! தடிக்கழுதெ. [அவனை அடித்து]
பாலெ நடுவுலே அல்லவோ ஊத்தச் சொன்னேன்!

ச. இல்லேப்பா, பாலெ நடுவுலே ஊத்தரு—

ச.மு. இன்னொரு வார்த்தெ பேசரு, ஒதைப்பேன் கழுதெ! சொன்னபடி செய்! [சிநேகிதர்களிருக்குமிடம் போகிருர்]

ச. உம்! உம்!

[அழுதுகொண்டே, பாலை எடுத்து உப்பும் ஐசும் போட்டிருக்கும் துத்தநாக டப்பாவில் வார்த்து சுற்றுகிருன்.]

ச.மு. சீக்கிரம் பண்ணு சுத்து! — பிரதர்ஸ் (brothers) நம்போ கொஞ்சம் பலஹாரம் முன்னே சாப்பிடலாம், அப் பறம் ஐஸ் கிரீம் (ice-cream) சாப்பிடலாம். [வெளியே பார்த்து] ஐயா! — அந்த நிமக்ஜான் முன்னே கொண் டாங்க.—

கு. அதென்ன பிரதர் (brother) புது பலஹாரம்?

ச.மு. அல்லாம் பாத்து சொல்லுங்க.

[ஒரு பிராம்மணன் உப்புமாவை தொன்னைகளில் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுக்கிறான்]

கு. என்ன, பிரதர் (brother) உப்புமாவா யிருக்குதே?

ச.மு. உப்புமாவுதான், அதுக்கு வேறெ பேர் வைச்சேன்.—

மு. ஏன்?

ச.மு. இந்த பிளான் (plan) சத்குண விலாச சபையிலிருந்து கத்துகினேன் பிரதர் (brother) — அங்கே ரிப்ரெஷ்மென்ட் (refreshment) சாப்பிடர மெம்பர் (member) இண்ணு ஒர்த்தர் இருக்கராரு, அவர் என்ன செய்யராருண்ணு, ஒரே பலகாரத்துக்கு வாரத்துக்கொருதரம் பேரெ சேன்ஜ் (change) பண்ராரு! அப்படி பேரெ மாத்தனெ, டேஸ்ட் (taste) டிபர் (differ) ஆகுதாம்— அத்தொட்டு சாதாரணமா உப்புமாவுண்ணு நண்ணெ யில்லெ இண்ணு, வேறெ பேர் வைச்சேன்.

மு. ஆமாம் பிரதர், (brother) நீங்க சொல்ரது சரிதான், இதுலெ டேஸ்ட் (taste) டிபரன்டா (different) தான் இருக்குது, உப்பே யில்லெ இதுலே.

ச.மு. ஏன் ஐயர்? உப்புமாவுலேயா உப்பு போட மறந்து பூட்டைங்க? தாலி கட்டர சம்பிரமத்லே, கலியாணத்தெ மறந்துபூட்டானாம்! — உங்களுக்கு நல்ல பனிஷ்மென்ட் (punishment) பண்ணனும்! நெக்ஸ்ட் டைம் (next time) நானு உப்புமாவு ஆர்டர் (order) பண்ண, உப்பு டபிலா (double) போட்டுக்கொண்டாரணும், காபகம் வைச்சிகுங்க—அடே, சபாபதி! ஐஸ் கிரீம் (ice-cream) கட்டிச்சாடா?

ச. இல்லேப்பா! இன்னம் கட்டலே!

கு. பரவாயில்லெ பிரதர், (brother) அதெ அப்படியே லிக்விட் (liquid) ஆ சாப்பிட்டாக்கூட நண்ணா யிருக்கும் பிரதர்.

ச.மு. ஆனா, ஐயர், அதோ அந்தப் பாலெ ஆளுக்கு கொஞ்சம் தொன்னையிலே வாத்து கொடுங்கையா.

[ஐயர் அப்படியே செய்கிறார்; எல்லோரும் ருசி பார்த்து காரி உமிழ்கிறார்கள்.]

என்னு பிரதர் (brother) சமாசாரம்? நண்ணு யில்லையா என்னு?

கு. இல்லெ பிரதர் (brother) கொஞ்சம் உப்பு அதிகமா யிருக்குது.

ச.மு. ஐஸ் கிரீம் (ice-cream) லே கொஞ்சம் உப்பு அதிகமா யிருக்குதா! அதுலே யார் உப்பெ போட்டது?—

[தானும் கொஞ்சம் ருசி பார்த்து]

து! து!—அடே, சபாபதி இங்கே வாடா, இதுலெ யார்டா உப்பெ போடச் சொன்னது உன்னே?—

ச. இல்லேப்பா, நீ கோவிச்சிக்காதேப்பா, நான் வெளி யிலே பாலெ வாத்து சுத்தனு, அப்புறம் நீ அது தப்பு, நடுவுலே பாலெ வாக்கணும் இண்ணு சொன் னேயே, அப்பவே நடுவுலே உப்பும் ஐசும் போட்டிருக் குதே இண்ணு சொல்லலாம் இண்ணு வாயெடுத்தேன். அதுக்குள்ள பேசனு ஒதைப்பேன் இண்ணு சொன் னேயா? அத்தொட்டு பேசாதிருந்தூட்டேம்பா—நானு என்னு செய்யரதப்பா?

ச.மு. இப்போ என்னு செய்யரது பிரதர்ஸ்? (brothers)— அவன் சொல்ரதும் கொஞ்சம் வாஸ்தவம்தான், எம் பேர்லேயும் கொஞ்சம் மிஸ்டேக் (mistake) இருக்குது; போனுபோவுது, இத்தெயெல்லாம் கீழே கொண்டும் பூடு—கீழே வைச்சூட்டு, அந்த பாடகருங்க வந்தாங் களே, அவங்களெ மெத்தமேலே வரச்சொல்.

[சபாபதி ஐஸ்கிரீம் மெஷினில் (ice-cream machine) இருந்ததை யெல்லாம் கடத்தில் கொட்டிவிட்டு மெஷினைக் கீழே கொண்டு போகிறுன்.]

கு. இந்த பாடகர் யாரு பிரதர்? (brother) புதுசா இருக் குது?

ச.மு. நாகசர ஐயர் இண்ணு தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வந்திருக்கிருரு, அங்கேயெல்லாம் ரொம்ப நொடோ ரியஸ் (notorous,) பேர் போனவர். இங்கே பாடணுகா மூணு தெருவுக்கு அப்பாலெ கேக்கும் — ரொம்ப கிளெவர் (clever) மான், (man) ஒரு கச்சேரிகி, கல்கண்டு மாத்தரம் பத்து பலம் சாப்பிடராரு.—

சபாபதி பாடகர்களை அழைத்துக்கொண்டு வருகிருன்.

நா.ஐ. ஆரம்பிக்கலாமா ?

ச.மு. உம்—ஆரம்பிங்க ஆரம்பிங்க.

[நாகேஸ்வர ஐயர் தம்புருவை எடுத்துக்கொண்டு வந்து ஸ்ருதி செய்கிருர்.]

கோ.ரா. என் புள்ளாங்கொழல்—காணுேங்க! [தேடுகிருன்]

ச. என்னு ஐயா தேடரைங்க !

கோ.ரா. புள்ளாங்கொழல்—இங்கே தான் வைச்சேன்.

ச. என்னமா யிருக்கும் அது ?

கோ.ரா. மூங்கில் கொழாயாட்டம் இருக்கும்.

ச. [ஒரு புறமாக சபாபதி முதலியாரிடம்] இந்தாப்பா — நேத்தும்புடிச்சி அம்மா அடுப்பு ஊதர கொழாயெ நான் தான் திருடிகினேன் இண்ணு சொல்லிகினு இருந்தாங்களே! அத்தெ திருடன ஆசாமியெ கண்டு புடிச்சூட்டேம்பா — இவர் தாம்பா, திருடிகினு போயி இண்ணைக்கி கொண்டாந்து இங்கே வைச்சூட்டாரு. நானு எடுத்துகினு போயி அம்மாகிட்ட கொடுக்க வச்சிருக்கேம்பா.

ச.மு. வாட் நான்சென்ஸ் (what nonsense !) அதுவா அடுப்பு ஊதர கொழா! கொண்டுவாடா போயி சீக்கிரம். [சபாபதி போகிருன்]

ஐயா, கோபிநாத் ராவ், உங்க கொழல் வருது பயப்படாதைங்க, அத்தெ எங்க மதர் (mother) பாக்கணும் இண்ணுங்களாம், எப்படி வாசிக்குது இண்ணு அதுக்காக என் வேலெக்காரன் கீழே கொண்டுபோய் கொடுத்தானும்.—

சபாபதி குழலைக் கொண்வந்து கொடுக்கிருன்.

நா.ஐ. பிள்ளெ, இப்படி வந்து உக்காருங்க.

ச.மு. என்னு அவருக்கு ?

நா.ஐ. அவருக்கு கண் கொஞ்சம் மத்திபம்.

ச.மு. ஓ! ஐ சி ! (Oh I see !) அதாம் கடம் வாசிக்கிருர் !

கோ.பி. அந்த கடத்தெ கொஞ்சம் கொண்டாரச் சொல்லுங்க.

நா.ஐ. அப்பா, அந்த கடத்தெ கொஞ்சம் கொண்டாப்பா.

ச. என்னத்தெ ?

நா.ஐ. அந்த கடத்தெ

ச. கடமிண்ணு ?

நா.ஐ. அந்த பானேடப்பா.

ச. பானையா ? அதென்னாத்துக்கு உங்களுக்கு ?

ச.மு. அடே! அதனப்பிரசங்கி! எல்லாத்துக்கும் குறுக்கே பேசிக்கினு!—கொண்டாந்து குடு மின்னே.

ச. இப்பவே நானு சொல்லிட்டேம்பா, அத்தெ அவரு ஒடைச்சாரு இண்ணு, அப்புறம் ரொம்ப கஷ்டம்.
[கொண்டுவந்து கொடுக்கிருன்]

நா.ஐ. என்ன ராகம் பாடலாம் ?

ச.மு. சொல்லுங்க பிரதர்ஸ் (brothers) என்னராகம் வேணும்?

கு. ரூபகம் பாடச் சொல்லுங்க.

நா.ஐ. அது—தாளம்—ஆச்சே?

ச.மு. ஓ!—அவரு நீங்க என்ன தாளம் பாடரது இண்ணு கேட்டைங்க இண்ணு நெனேச்சாப்போலெ இருக்குது. ஐயா. நரசிம்மாசாரி, நீங்க சொல்லுங்க என்ன ராகம் பாடணும்.—

ந. தேசிகர் தோடி பாடச் சொல்லுங்க.

ச.மு. என்ன ஐயா, இதுலே கூடமா வடகலெ தென்கலெ சண்டெ? ஐயா, நீங்கள் தேசிகர் ராகம் ஒண்ணும் பாடத் தேவலே, மணவாளமாமுனி ராகமா ஏதாவது பாடுங்கோ !

நா.ஐ. கல்யாணி பாடரேனுங்க.

ச.மு. சரிதான்.

[கலியாணி ராகம் ஆலாபனே செய்து பிறகு அதில் பல்லவி பாடுகிருர்]

ஐயா, தாளத்தெ கொஞ்சம் கவனியுங்க.

கோ.பி. இந்த கடம் என்னமோ பளுவா யிருக்குதே.

நா.ஐ. கொஞ்சம் இழுத்துப் போடுங்க.

ச. வாணும்! வாணும்!

ச.மு. அடே! பேசாதிரு, இதிலே எல்லாம் தலெ நொழைச்சிக்காதே.

[கோவிந்தபிள்ளை கடத்தின் மீது பலங்கொண்டு முத்தாயிப்பு கொடுக்க, கடம் உடைந்து உள்ளே யிருக்கும் உப்பும், பாலும், ஐசும அவர் மீதெல்லாம் விழுகிறது]

கோ.பி. இதென்னவுங்க !—

ச. நானு அப்பவே சொல்லலே வேணும் இண்ணு! ஒடஞ்சா கஷ்டமிண்ணு சொல்லலே ?

ச.மு. அடே! தடிக்கழுதெ! என்னடா செய்தே! இதிலெ ஏண்டா இத்தையெல்லாம் ஊத்தனே ?

ச. இல்லேப்பா, நானு கீழே கொண்டுபோய் ஊத்திவுட லாமிண்ணு பாத்தேன், இதுக்குள்ளே நீ அவர்கிட்ட கொடுக்கச் சொன்னையா, உடனே கொடுத்துட் டேம்பா! அதுக்குத்தான் மொதல்லேம்புடிச்சி மொள் ளமா அடிங்க மொள்ளமா இடிங்க், இண்ணு அவர் கிட்ட சொல்லிகினு இருந்தேன்.

ச.மு. இந்த இடியட்டே (idiot) என்ன செய்யரது பிரதர் ? (brother) அப்புறம் உனக்கு செய்யவேண்டிய வேலெ செய்யரேன், இப்போ கீழே போயி, நல்ல பானையா ஒரு பானெயெ வாங்கிகினு வா [சபாபதி கீழே போகிறன்] அது வர்ரவரைக்கும் கொஞ்சம் கச்சேரியெ நிறுத்தி எங்க தமிழ் வாத்தியார் எம்பேர்லெ ஒரு சாத்துகவி பாடி யிருக்கராரு, அதெ படிப்போம்—எங்கே அவர் வரலே இன்னம்? பரவாயில்லே — நரசிம்மாசாரி, நீங்க ராகத்தோட நண்ண படிப்பைங்க — எங்கே அந்த சாத்துகவி எழுதன காயிதம்? — அடே சபாபதி! இங்கே வா இப்படி.

சபாபதி மறுபடி வருகிறன்

எங்கேடா அந்த தமிழ் வாத்தியார் ஒரு காயிதம் வைச் சூட்டுப் போனரே இங்கே?

ச. அந்த காயிதமா? இதோ கொண்டாரேம்பா [போகிறன்]

ச.மு. ஒரு நிமிஷம் சும்மா இருக்கமாட்டேண்ரா! என்ன மான தப்பு பண்ணிகினு இருக்கரான்!

சபாபதி மறுபடி வருகிறன்

ச. இதோ அப்பா!

ச.மு. அவர்கிட்ட குடு—நீங்க ராகத்தோடு படிங்க பிரதர். (brother). [சபாபதி கீழே போகிறன்]

ந. [காகிதத்தைப் பார்த்து] இத்தெ என்னமா பிரதர் (brother) ராகத்தோடெ படிக்கிறது—என்னமோ தப்பா யிருக்குது பிரதர் (brother).

ச.மு. நீங்ககூட என்னு பிரதர், (brother) சபாபதியெப் போலே சொல்ரத்துக்கெல்லாம் குறுக்கா சொல்லி கினு இருக்கரைங்க—இருக்கரத்தெ ராகத்தோடே படிங்களேன்.

ந. உங்க இஷ்டம். [ராகத்துடன் பாடுகிறார்]
மஞ்சள் ஐந்து பலம், குங்குமம் பத்து பலம், வெற்றிலை நாலணு, பாக்கு அரைவீசை—

ச.மு. என்னு பிரதர் (brother) இது? சாத்துக்கவியா இது?

ந. அதுக்குதாம் அப்பவே சொன்னேன், ஏதோ தப்பா எழுதி யிருக்குதிண்ணு—ஓ! இந்த பக்கம் எழுதி இருக்கராரு—

சபாபதி ஒரு கரிப்பானையைக் கொண்டு வருகிறன்.

ச. இந்த பானெ தவிர வேற பானெ இல்லேப்பா!

ச.மு. ஏண்டா? கரிப்பானெயா கொண்டாரச் சொன்னேன்!

ச. அவருக்கு கண்ணு தெரியாதப்பா!—

ச.மு. போ வெளியே அதனப் பிரசங்கி!

[அவனைப் பிடித்துத்தள்ள, பானை கீழே விழுந்து உடைகிறது]

ஒரு தபால்காரன் வருகிறன்

த. நாயினு தந்தி வந்திருக்குது.

ச.மு. தந்தியா? கொண்டா இப்படி.

(கையெழுத்துப்போட்டு அதை வாங்கிப் பிரித்துப் பார்க்கிறார். தபால்காரன் போகிறன்)

மு.கி. என்னு பிரதர் (brother) விசேஷம்?

ச.மு. மை மதர் இன் லா நியர் ரிலேடிவ் டைட் (my mother in-law near relative died) நான் உடனே புறப்பட வேண்டியதாயிருக்குது.—ஐயா, கொஞ்சம் கச்சேரியெ நிறுத்துங்க—நெக்ஸ்ட் டிரெயின் (next train) எப்பொ பொறப்படுது பிரதர்? (brother)

மு. ஆறு மணிக்கு புறப்படுது.

ச.மு. அப்போ நான் உடனே பாக் (pack) பண்ணணும். உங்களை யெல்லாம் டிஸ் அபாயின்ட் (disappoint) பண்ரது எனக்கு ரொம்ப வருத்தமா யிருக்குது பிரதர்ஸ் (brothers) ஆனலும் இது ரொம்ப அர்ஜென்ட் மாடர்

(urgent matter) நீங்கல்லாம் இப்போ தயவு செய்து டேக் லீவ் (take leave), பண்ணுங்க, இன்னொரு நாளைக்கி இந்த பார்டி (party) வைச்சிகலாம்.

(சபாபதி முதலியாரும் சபாபதியும் தவிர, மற்றவர்களெல்லாம் போகிறார்கள்)

ச. என்னப்பா சமாசாரம்?

ச.மு. உடனே சாமான்களெல்லாம் பாக் (pack) பண்ண ணும்,—ஊருக்குப் போவணும்.

ச. ஏம்பா?

ச.மு. இத்தெ யாரு கிட்டவும் சொல்லாதே இப்போ! தெரி யுமா?—மச்சான் கிட்ட யிருந்து தந்தி வந்தது, நீ பாஸ் (pass) பண்ணதாக எழுதியனுப்பனனே அது தப்பு. பாஸ் (pass) பண்ணது பட்டணத்திலே யிருக்கிற பம் மல் சபாபதி முதலியார், எனக்கு சொன்னவங்க முன்னே தப்பா சொன்னுங்க, மன்னிக்கணும், இண்ணு தந்தி கொடுத்திருக்கிறான்.

ச. அடடெ! அப்பவே நெனைச்சேம்பா.

ச.மு. எனக்குக்கூடம் சந்தேகமாயிருந்துது, என்னமா பாஸ் பண்ணேம் இண்ணு; இப்போ இன்னம் ஒரு மாசம் பட் டணத்துலேயே இருக்கக்கூடாது. இவ்வளவு தூரம் எல்லோருக்கும் சொல்லி கில்லி, பார்ட்டி யெல்லாம் கொடுத்தபிற்பாடு, ரொம்ப வெட்கக்கேடா போகும்.

ச. ஆமாம்பா—இத்தெயெல்லாம் நெனைச்சிகினு எனக்கே சிரிப்பாயிருக்குதுப்பா. — ஏம்பா, இத்தெ யெல்லாம் ஒரு நாடகமா போட்டா நண்ணுயிருக்காதாப்பா!

ச.மு. அப்படிதான் எனக்கும் தோணுது— நீ போயி சீக்கிரம் பாக் (pack) பண்ணு.

ச. [கொஞ்சதூரம் போய் திரும்பிவந்து] ஏம்பா, அப்படி போட்டா அதுக்கு என்னப்பா பேர் வைப்பே?

ச.மு. எம்பேர்தான் வைக்கலாமிண்ணு யோசிக்கிறேன்.

ச. ஏம்பா, எம்பேர் கொஞ்சம் வையேம்பா?

ச.மு. சத்! நான்சென்ஸ்! (nonsense) அதெல்லாம் ஓதவாது எம்பேர்தான் வைக்கணும்.

ச. ஆறு —சபாபதி இண்ணு வை அப்பா, யாரு எப்படி ஒணுமிண்ணாலும் நெனைச்சிகட்டும்பா. [போகிறான்]

ச.மு. அவன் சொல்ரதும் ஒரு யுக்திதான்!

நாடகம் முற்றிற்று.

—(o)—

அருட் பெருஞ்ஜோதி அச்சகம்,
சென்னை-1.